
Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.மக்களின் நன்மை கருதி
EXPO AVIATION
LION AIR
SERENDIB EXPRESS
யாழ். - கொழும்பு - யாழ்.
மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...
ஹெப்பி இம்பெக்ஸ்
புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 - 2226144
24 மணி நேர சேவைக்கு 077-6038505
(சி-1096)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 29 (30.07.2003) புதன்கிழமை இதழ்: 300



கேணல் கருணாவுடன் தமிழ்ச்செல்வன்.

## கிழக்கு அரசசார்பற்ற பிரதிநிதிகளை தமிழ்ச்செல்வன் சந்தித்துப்பேச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்குச் சென்றுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச்செல்வன் - நேற்று அங்குள்ள பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் - தமிழ்ச்செல்வனுடன் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணாவும் கலந்துகொண்டார்.

கிழக்கில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டது. மட்டு- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், பிராந்திய அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், பிராந்திய பிரதி அரசியற்துறைப் பொறுப்பாளர் கிருஷன் ஆகியோர் - கரடியனாறு தேனகம் விடுதியில் மூன்று மணிநேரம் நடைபெற்ற இந்தச்சந்திப்பில் பங்கேற்றனர்.

## புலிகளின் முகாம் மீது படையினர் நடவடிக்கையா?

# கண்காணிப்புக் குழு பிரதி தலைவர் மீது பிரதமர் ரணில் கண்டனம் தெரிவிப்பு!

## யார் அதிகாரம் வழங்கியதாக கேள்வி

(கொழும்பு)

**திருகோணமலை - குரங்குப்பாஞ்சானிலுள்ள புலிகளின் முகாம் குறித்து, தவறான கருத்துகளை வெளியிட்டமைக்காக - போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் மீது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டனம் தெரிவித்துள்ளார்.**

குரங்குப்பாஞ்சானிலுள்ள முகாமை புலிகள் உடனடியாக அகற்றாவிட்டால், இராணுவத்தினர் இந்த முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் - அப்போது கண்காணிப்புக்குழு இந்த விடயத்தில் தலையீட முடியாது போய்விடும் என்றும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லன்ட் செய்தி ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் குறித்து நேற்றுமாலை பிரதமர் ரணில், ஹொக்லன்டுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தனது கண்டனத்தை - மிகவும் காரசாரமான தொனியில் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்வை உயிர்ப்புடன் நகர்த்தும் துடுப்பாக இன்றைய இலக்கியம்

### புதுவை நூலுக்கு தமிழ்ச்செல்வன் வாழ்த்து

(யாழபபாணம)

எமது இனத்தின் மூச்சாக, எமது மக்களின் வாழ்வியக்கத்தை உயிர்ப்புடன் நகர்த்திச்செல்லும் ஒரு துடுப்பாக, இன்றைய விடுதலை இயக்கப் படைப்புக்கள் உருவாக்கம் பெற்றுள்ளன என்று, கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய 'வியாசனின் உலைக்களம்' நூலுக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி பொற்பதி முகாம் அமைப்பது இடைநிறுத்தம்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு - பொற்பதியில் புதிய இராணுவமுகாம் அமைக்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

அப்பகுதியில் புதிய படைத்தளம் அமைக்கப்படுவதற்கு, பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். எனினும்- அப்பகுதியில் படைத்தளம் அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டதுடன், பெருமளவு படையினரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர்.

தற்போது அப்பகுதியில் படையினர் நிலைகொண்டிருக்கின்ற போதிலும், படைத்தளம் அமைக்கும் முயற்சிகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## புலிகளுடன் அரசு பேசுவதா? சட்டநடவடிக்கை எடுப்போம்!

### டக்ளஸ் தேவானந்தா எச்சரிக்கை

(கொழும்பு)

ஏனைய தமிழ்க் கட்சிகளைக் கலந்தாலோசிக்காது, விடுதலைப் புலிகளுடன் வடக்கு - கிழக்கு நிர்வாகம் குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக - அரசாங்கத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எச்சரித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் தெரிவிக்கையில் -

'நாங்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள், எங்களுடனும் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் குறித்துக் கலந்தாலோசிக்க வேண்டும். ஏனைய தமிழ்க் கட்சிகளின் உரிமைகளை அவமதித்துள்ள தற்போதைய அரசு, சட்டப்பிரச்சனைகளைச் சந்திக்கும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி. ஆயுதங்களைக் கையளித்துவிட்டதா என்று, நிருபர் வினாவியபோது, அந்தக் கேள்விக்குப் பதிலளிக்க டக்ளஸ் தேவானந்தா மறுத்துவிட்டார்.

## படையினரை அறிவுறுத்தியவர் கடுமையாகத் தாக்கப்பட்டார்!

### யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் - உணவகம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர், மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினரால் - மிகமோசமாகத் தாக்கப்பட்டு, தலையில் படுகாயமடைந்தார். யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டபோதிலும், அச்சம் காரணமாக அவர் அங்கிருந்து தலைமறைவாகியுள்ளார்.

உணவக வாசலின் குறுக்காக மோட்டார் சைக்கிளைப் படையினர் நிறுத்தியவேளை, அதனை ஒரு ஓரமாக நிறுத்தும்படி அவ்வூழியர் கூறியபோதே, படையினர் அவரைத் தாக்கியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் 2 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த தங்கராசா (வயது 55) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

(111)

### விண்ணாணம் விநாசியர்



எப்படியாவது குழப்பவேணுமென்று தீர்மானிச்சிட்டினம் போல....!

## புலிகளின் உத்தியோகபூர்வ பதில் மேலும் தாமதமடையலாம்!

(கொழும்பு)

அரசினால் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட, வட - கிழக்கிற்குரிய இடைக்கால நிர்வாகத்துக்கான திட்டவரைபு குறித்த விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பதில் வெளியிடப்படுவது, மேலும் தாமதமடையும், என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி திட்டவரைபு குறித்து ஆராய்வதற்காக, அடுத்த மாத முதல் வாரமளவில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வெளிநாட்டுக்குப் பயணமாகவிருக்கிறார்.

மேற்படி திட்டவரைபு குறித்து (10 ஆம் பக்கம் பார்க்க)




EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# நல்லூர் கோட்ட ஆங்கிலதினப் போட்டி; வெற்றிபெற்ற மாணவர்கள் விவரம்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில், வகுப்பு ரீதியாக முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு-

**தரம் 3**

பி.தேனிலன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ஜெ.மதுசிகன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ஆர். சிந்துஜா (யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை).

**தரம் 4**

வி.சாந்தனா (யாழ்.இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை), எஸ்.அபிராமி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.ஹிஷாங்கி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), பி.கஜமாலன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

**தரம் 5**

எஸ்.நரேந்திரன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.திருமகள் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), எம்.நீதினி (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

**தரம் 6**

ரி.விஜனோஜன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.செல்வலஷ்மி (யாழ். இநது மகளிர் கல்லூரி), வி.விவியன் (யாழ். இந்துக் கல்லூரி).

**தரம் 7**

ரி.செழியன் (யாழ். இந்துக் கல்லூரி), எம்.சுபாஜினி (யாழ்.இந்துமகளிர் கல்லூரி), ஆர்.தர்சிகா (கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்), ரி.கிருஷ்ணப்பிரியா (யாழ்.இந்துமகளிர் கல்லூரி).

**தரம் 8**

ஆர்.பவதாரணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), கே.கோபிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ரி.துஷாரகி (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தரம் 9**

பி.நிரோஷன் (யாழ். இந்துக் கல்லூரி), ஜெ.ஜெசிந்தா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), யு.சரண்யா (யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்).

**தரம் 10**

வி.சரிதாசினி (யாழ்.இந்து மகளிா கல்லூரி), ஜி.அமரேஷ் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.சுலக்ஷன் (யாழ். இந்துக் கல்லூரி).

**தரம் 11**

எம்.விவேக் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.பிரபு (யாழ்.இந்துக் கல்லூரி), வி.மீரா (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி),

### ஆயத்தப் பேச்சு

**தரம் 12**

வி.அபர்ணா (யாழ்.இந்துக் கல்லூரி), எம்.அன்பரசன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.நிருதாஞ்சலி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**தரம் 13**

எஸ்.தர்மிலா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), என்.பகீரதன் (யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்), ஜெ.நளினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

### ஆயத்தமின்றிய பேச்சு

கே.தர்சனன் (யாழ்.இந்துக் கல்லூரி), எம்.அன்பரசன் (யாழ். இந்துக் கல்லூரி).

**தரம் 13**

கே.குருபரன் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.சரண்யன் (யாழ். இந்துக் கல்லூரி).

### பார்த்தெழுதுதல்

**தரம் 3**

எஸ். கனிமொழி (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), எஸ். கஜனரஜனி (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ஆர். அஜந்தா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

**தரம் 4**

ரி.மதுசோபிகா (யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ரி. ஆர்த்திகா (யாழ்.கல்வியங்காடு இ.த.க. பாடசாலை), ஆர்.சஞ்சிகா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

**தரம் 5**

யு.வானதி (யாழ்.கல்வியங்காடு இ.த.க. பாடசாலை), எஸ்.சுஜீவா (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ஏ.தன்சாயினி (யாழ்.திருநெல்வேலி இ.த.க பாடசாலை).

**தரம் 6**

வி.அஜலக்ஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.இந்துமதி (யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), எஸ். மதிவதனி (யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயம்).

**தரம் 7**

பி.சங்காயத்திரி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஆர்.தர்சிகா (கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்), சி.சகானா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தரம் 8**

எஸ்.துவாரகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர்.ரேணுகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.தர்சிகா (கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்).

**தரம் 9**

ரி.பிரசாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), பி.மதுரா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பி.சகிலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**தரம் 10**

ஆர்.திவ்வியா (யாழ்.இந்துமகளிர் கல்லூரி), என்.கயானா (யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி), எம்.விமல்ராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி).

**தரம் 11**

எஸ்.சுகந்தினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கே.பிரியதர்சினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), என்.பிரபு (யாழ்.இந்துக் கல்லூரி).

**தரம் 12**

பி.சிவபாலன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.காயத்திரி (கொக்குவில் இந்துக் கல்லூரி), வை.ரோகினி (யாழ். இந்துமகளிர் கல்லூரி).

**தரம் 13**

எஸ்.பிரவீனா (கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலம்), கே.சயந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.தனுஷன (கொக்குவில் இந்துக் கல்லூரி).

### ஆக்கத்திறன்

**தரம் 6**

இ.கௌசிகன் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.சதீஸ்காந்த் (யாழ்.இந்துக் கல்லூரி), ஏ.சாம்பவி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**தரம் 7**

பி.தீபிகா (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), வி.ஆரூரன் (யாழ். இந்துக் கல்லூரி), ஜி.கோபிகாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**தரம் 8**

கே.ஹர்சன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஆர்.ரிஷிகேசன் (யாழ்.இந்துக் கல்லூரி), மீராஜி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி),

**தரம் 9**

கே.ஈஸ்வரஜனனி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), என்.கௌசிகன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.இந்துஹாசன் (நல்லூர் ஸ்தான சி.சி.ரி. பாடசாலை),

**தரம் 10**

எஸ்.விதூசன் (யாழ்.இந்துக் கல்லூரி), பி.சிவபாஸ்கரி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.தெயோமயானந்தா (யாழ்.இந்துக் கல்லூரி),

**தரம் 11**

ரி.சேருஜனன் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.வாணி (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஜி.சரண்யா (கொக்குவில்.இந்துக் கல்லூரி),

**தரம் 12**

கே.நிருத்திகன் (யாழ். இந்துக் கல்லூரி), கே.தர்சனன் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.நிலுக்ஷி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி),

**தரம் 13**

கே.குருபரன் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.கௌசல்யா கொக்குவில் இந்துக் கல்லூரி), எம்.கலாரூபன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.வாகீசன் (யாழ்.இந்துக் கல்லூரி),

### சொல்வதெழுதல்

**தரம் 6**

இ.கௌசிகன் (யாழ்.இந்துக் கல்லூரி) டபிள்யூ.கஜரூபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) என்.சதீஸ்காந்த் (யாழ்.இந்துக் கல்லூரி)

**தரம் 7**

எஸ்.கோபிகாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.குணதீபன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.அருள்நந்தி (கொககுவில்.இந்துக் கல்லூரி)

**தரம் 8**

கே.எழில்வேல் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.லோஜனா (கொக்குவில் இந்துக் கல்லூரி), என்.சிவகாமி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி),

**தரம் 9**

கே.சிவரூபி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.விஜயசாந்த் (யாழ். இந்துக் கல்லூரி), பி.நிரோஷன் (யாழ. இந்துக் கல்லூரி)

**தரம் 10**

எஸ்.விதூசன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.ஸ்ரீரம்யா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.நிஷாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**தரம் 11**

எஸ்.யசோதரன் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.அபிராமி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), என்.வாணி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**தரம் 12**

கே.நிருத்திகன் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.கஸ்தூரி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), என்.நிலுக்ஷி (யாழ். இந்து மகளிர் கல்லூரி),

**தரம் 13**

வி.கௌசல்யா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எம்.கலாரூபன் (யாழ. இந்துக் கல்லூரி), எஸ்.வனஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி),

## மாத்தளையிலிருந்து வந்தவர் மர்மமான முறையில் மரணம்!

(யாழ்ப்பாணம்)

மாத்தளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த வாகனச் சாரதியொருவர், மர்மமான முறையில் இறந்த சம்பவமொன்று, நேற்று தாவடியில் இடம் பெற்றது. மாத்தளையைச் சேர்ந்த விஸ்வநாதன் குணசீலன் (வயது43) என்பவரே மரணமானவராவார்.

நேற்றுமுன்தினம் மாத்தளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த வாகன ஓட்டுநரான இந்த நபர், தாவடியில் தங்கினார். இரவுவேளை சிறுநீர் கழிப்பதற்காக வெளியில் சென்றபோது - நிலத்தில் வீழ்ந்து மரணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் இறந்தது குறித்து விடியற்காலையிலேயே தெரியவந்தது. இதையடுத்து இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (111,ரா)

## சட்டவிரோத மதுபானம் விற்றவருக்கு மூன்றுமாத சிறை

(வடமராட்சி)

புலோலியில், சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்தவருக்கு மூன்றுமாதகால சிறைத்தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பருத்தித்துறை பொலிஸார் மேற்படி நபருக்கெதிராக, பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கிலேயே குறித்த நபருக்கெதிராக மூன்று மாதகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

## முப்படைகளுக்கும் 10,000 பேரை ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை!

(கொழும்பு)

முப்படைகளுக்குமென பத்தாயிரம் பேரை ஆட்சேர்ப்புச்செய்ய, பாதுகாப்பு அமைச்சு முடிவெடுத்துள்ளதாக, இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களில், 50,000 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் - இராணுவத்தை விட்டு தப்பியோடியுள்ளதாலும், இன்னும் பல ஆயிரம் படையினர் - மோதல்களில் உயிரிழந்துள்ளதாலும் இந்த வெற்றிடங்களை நிரப்ப, எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திலிருந்து, ஆட்சேர்ப்புப் பணியை நாடுமுழுவதும் முடுக்கிவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சின் சார்பில் கருத்து வெளியிட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## படையினரின் முட்கம்பியில் சிக்குண்டு பாடசாலை மாணவன் ஒருவன் காயம்!

இராணுவ காவலரணுக்குள் புகுந்த புறாவைப் பிடிப்பதற்காக, அதில் ஏறிய சிறுவன், பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட முட்கம்பிக்குள் சிக்கி கையில் படுகாயமடைந்த சம்பவம், நேற்றுமுன்தினம் குருநகர் கடற்கரை வீதிப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில், பாடசாலை மாணவனான கண்ணன் அலன் (வயது 10) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (111)

## சின்னஞ் சிறு செய்திகள்

### பேருந்து - வான் மருனார்மடத்தில் மோதல்

யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து, - அதே வீதியால் யாழ்.நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்த 'ஹையேஸ்' வானுடன் நேருக்கு நேராக மோதியது.

மருதனார்மடம் - ஆஞ்சநேயர் கோவிலடியில் இடம்பெற்ற இந்த விபத்தில், ஹையேஸ் வான் பெருமசேதத்துக்குள்ளானது. போக்குவரத்துச்சபை பேருந்தும் சிறிது சேதத்துக்குள்ளானது.

பேருந்துச் சாரதியின் சாதுரியமான செயற்பாட்டால், பயணிகளுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டனர். (69)

### கறுப்பு ஜூலை நினைவுக் கூட்டம்

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் - கறுப்பு ஜூலையின் 20 ஆவது வருட நிறைவினையொட்டி, மக்கள் எழுச்சிக் கூட்டமொன்று, இன்று மாலை 4.30 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இனத்துவேச கொடூரங்கள் இனி மேலும் வேண்டாம் என்று அழுத்தமாகக் குரல் எழுப்புவதற்கே, இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழக ஆதரவுடன் நடத்தப்படும். "யாழ். மாவட்டக் கல்வித்தரத்தின் அண்மைய போக்கு " என்னும் விடயம் தொடர்பான கருத்தரங்கு - இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### நந்தாவிலில் ஆடிப்பூர உற்சவம்

ஆடிப்பூரத்தை முன்னிட்டு, கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில், நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை 6 மணிக்கு - அபிஷேக ஆராதனைகளும், 8 மணிக்கு அம்பாளுக்கு திருமஞ்சள் நீராட்டலும் அதனைத் தொடர்ந்து 9 மணிக்கு ருது சாந்தி உற்சவமும் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருவார்.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் இயந்திரங்கள் (சைனா) 10",12",14",16" ஆகியனவும், ஜெனரேட்டர்கள், வெல்டிங் ட்ரான்ஸ்போமர், எலக்றிக் றில்லர்கள், வேலைப்பாடு சீவும் றவுட்டர்கள், அலுமினியக் கட்டிங் மெஷின் என்பனவும் விற்பனைக்குண்டு.

தொடர்பு - கி.சுதாகரன், இல.20, 2 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

T.P 0777 295998

நிறஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், பிரியங்கா, விவேக் நடித்த

காதல் சடுகுடு

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

THE MUMMY

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

இயக்கம்: விக்ரமன்

(சி-1137)

# மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும், ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள "புத்தகக் கடல்" 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினிப் புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ளப் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர பாடசாலை அலுவலக உபகரணங்களும், பாடசாலை அழிபொருட்கள், மூலப்பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1280)

# புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்குவது தனிநாடு உருவாகுவதற்கே வாய்ப்பளிக்கும்!

## ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறுகிறார்



தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படு வதை எதிர்த்து - போராட்டம் நடத்தப் போவதாக, ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுக்காலை கொழும்பில் ஜே.வி.பி நடத்திய ஊடகவியலாளர் களுக்கான மாநாட்டில், அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

தமிழீழ விடுதலைப் புலிகளால், கடந்த இருபது வருடங்கள் நடத்தப் பட்ட யுத்தத்தில்- வெற்றிகான முடி யாத நிலையில், தற்போதுள்ள அர சாங்கம் - புலிகளுக்கு வலியச்சென்று தனிநாட்டுக்கான வாய்ப்புகளை வழங்குவதாகத் தெரிவித்தார்.

புலிகளுக்கு இடைக்கால நிர் வாகம் வழங்கப்படுவதும், சர்வதேச அமைதிப்படையொன்றை இலங் கைக்கு வரவழைக்கப்படுவதும், தனிநாடு உருவாவதற்கே வாய்ப் பளிக்கும் எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எனத் தனியான கட்டுப்பாட்டுப் பிரதேசங் கள் எதுவும் இல்லை. முல்லைத் தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் உள்ள காடுகள்தான் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனவும், அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செலவில், விடு தலைப் புலிகள், உலங்கு வானூர்தி களில் சுற்றுலாவுக்குச் சென்று வரு வதாகவும் அவர் மேலும் கூறினார்.

# பதியத்தலாவ சோதனைச் சாவடியில் பொலிஸாரின் கெடுபிடிகள் அதிகரிப்பு!

(மட்டக்களப்பு)

கல்முனையிலிருந்து அம்பாறை வழியாகச் செல்லும் பயணிகள் பஸ் கள் அனைத்தும், அம்பாறை, உஹன பூரவுக்கும் - பதியத்தலாவைக்கு உட் பட்ட அனைத்து பொலிஸ் சாவடிக ளிலும், பலத்த சோதனை மேற்கொள் ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் - இந்தச் சோதனைச் சாவடிகளில் இறக்கப்பட்டு, பலத்த சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகி றன.

பயணிகளின் பெயர் உள்ளிட்ட பல்வேறு விபரங்கள், மேற்படி சோத னைச் சாவடிகளில் பதியப்படுவதா கவும், பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விபரங்களை, தமிழ்மொழி புரியாத ஊர்காவற்படை வீரர்களே பதிவு செய்வதால், பயணிகள் பல் வேறு அசௌகரியங்களுக்கு உள் ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கஞ்சா வைத்திருந்த ஒருவர் மன்னாரில் கைது!

மன்னார்ப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த ஒருவர், பொலிஸாரி னால் கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மன்னார் பள்ளி முனையில் நடைபெற்ற இச்சம்ப வத்தில் - கைது செய்யப்பட்டவரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கிலோ எடையுள்ள கஞ்சா செடிகளையும் பொலிஸார் மீட்டனர்.

மேற்படி நபரை, மன்னார் நீதிமன றில் ஆஜர் செய்தபோது, எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு, மன்னார் நீதிவான் உத்தரவிட்டார். (201)

# குற்றத் தடுப்புப் பிரிவில் பணியாற்றிய ஆறு பொலிஸார் திடீரென இடமாற்றம்

## பொறுப்பற்ற முறையில் பணியாற்றினார்களாம்

(கொழும்பு)

நீர்கொழும்பு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவில் பணியாற்றி வந்த பொலிஸ் அத்தியட்சகர் உட் பட, ஆறு பொலிஸார் நேற்றுக்காலை திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள் ளனர்.

நீர்கொழும்புப் பொலிஸ்நிலை யத்தில் இவர்கள் பணியாற்றி வந்த சுமார் இரண்டு வருடகாலப்பகுதி யில், பொதுமக்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் - உரியவாறு புத்த கங்களில் பதியப்படாது, தற்காலிக மான சில புத்தகங்களில் பதியப்பட் டுள்ளன.

இதனால், உடனடியாக விசாரிக் கப்படவேண்டிய சுமார் 26 முறைப் பாடுகள் உரிய காலப்பகுதியில் விசாரிக்கப்படாமல் தேங்கியுள்ளன.

இவ்வாறு பொறுப்பற்றமுறையில் பணியாற்றிய பொலிஸ் அத்தியட் சகர் உட்பட 6 பொலிஸாரையும் உடனடியாக இடமாற்றம் செய்தது டன், இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ் திணைக்க ளம் உத்தரவிட்டுள்ளது. (01)

### கியுடெக் உதவியுடன் முன்பள்ளி மாணவருக்கு சத்துணவு

(யாழ்ப்பாணம்)

கியுடெக் நிறுவன உதவியுடன், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர் வாழ்வுக் கழகத்தினர் - நூறு முன் பள்ளி மாணவருக்கு வாரத்தில் ஐந்து நாட்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத் தியுள்ளனர்.

இதன் பிரகாரம், புலோப்பளை கிழக்கு, கோயில்வயல், கச்சார் வெளி, அல்லிப்பளை, மாசார் ஆகிய கிராம முன்பள்ளி மாணவர்களுக் குச் சத்துணவு வழங்கப்பட்டு வரு கின்றது.

# கொழும்பில் அலுவலகம் அமைக்க ஈ.என்.டி.எல்.எவ். இயக்கம் முயற்சி!

## இந்தியா பின்னணியில் இருப்பதாகத் தகவல்

ஈ.என்.டி.எல்.எவ் இயக்கத்தை மீண்டும் செயற்படவைக்கும் முயற்சி களில், இந்தியா தீவிரமாக ஈடுபட் டிருப்பதாக, கொழும்புச் செய்தி வட் டாரங்கள் தெரிவித்தன.

இந்தியப்படையினர் இலங்கை யிலிருந்து 1990 இல் வெளியேறிய போது, இங்கிருந்துசென்ற ஈ.என்.டி. எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்த வர்கள், இந்தியாவில் வாழ்ந்து வந்தனர்.

இவர்களை ஒன்றுதிரட்டி, இலங் கையில் மீண்டும் செயற்படவைக் கும் முயற்சிகளில் - இந்தியா இறங் கியிருப்பதாகக் கூறப்படுகிறது. இதன் ஒரு கட்டமாக - ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்திற்கு, கொழும்பில் தலைமை அலுவலகம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் எடுக் கப்பட்டிருப்பதாகவும், இதற்குக் கட் டடம் ஒன்று வாடகைக்குப் பெறப்பட் டிருப்பதாகவும், கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கு எதி ரான அரசியல் இயக்கங்களை ஒன்றிணைக்கும் முயற்சியின் ஒரு கட்டமாகவே - ஈ.என்டி.எல்.எவ்வினர், இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டி ருக்கலாம் என, கொழும்பு ஊடக வட்டாரங்களில் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

ஈ.என்டி.எல்.எவ். இயக்கத்தினை மீளமைக்கும் நோக்குடன் - புளொட் உட்பட, தமிழ்க் குழுக்களின் முன் னாள் உறுப்பினர்கள் பலரைத் திரட் டும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பேனா வடிவிலான துப்பாக்கி வெலிகமவில் மீட்கப்பட்டது!

(கொழும்பு)

பேனா போன்ற உருவ அமைப் புடைய சிறிய நவீனரகத் துப்பாக்கி ஒன்றையும், பல கைக்குண்டுகளை யும் வெலிகம பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

வெலிகம பொலிஸ் பிரிவிலுள்ள, பட்டுப்பொல பகுதியிலுள்ள வீடொன் றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில், பொலிஸார் இவற்றைக் கண்டுபிடித் துள்ளனர்.

வீட்டிலிருந்த பெண் ஒருவரை யும், அதைக் கொண்டுவந்ததாகக் கருதப்படும் நபர் ஒருவரையும் - வெலிகம பொலிஸார் கைதுசெய் துள்ளனர்.

# சுயவிருப்பில் ஓய்வுபெற அரச ஊழியர்களுக்கு வசதி!

## அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பிவைப்பு

அரச கூட்டுத்தாபனங்கள், சபை கள், திணைக்களங்களில் கடமை யாற்றும் ஊழியர்களும், சுயவிருப் பத்தின் பேரில் ஓய்வுபெறலாம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக - சுற்றறிக்கை ஒன்றை திறைசேரியின் செயலாளர் சரித் ரத்வத்தை, அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

சுயவிருப்பில் ஓய்வுபெற்றுச் செல்லுபவர்கள் தொடர்பாக, வய தெல்லை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது எனத் தெரி விக்கப்படுகிறது.

10 வருடம் சேவையாற்றிய ஒரு வருக்கு - வருடத்துக்கு 2 மாத சம்பள வீதம் வழங்கப்படவுள்ளது. இந்தக் கணிப்பீடு, அவர் ஓய்வு பெறுவதற்கான உரியகாலம்வரை மேற்கொள்ளப்படும்.

10 வருடத்துக்குக் குறைவாக சேவையாற்றியவருக்கு, ஒரு வரு டத்துக்கு 5 மாதத்துக்கான சம்பள விகிதத்தில் வழங்கப்படும் அல்லது ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும்.

நாளாந்த அடிப்படையில் அல் லது நிரந்தர மற்ற சேவையில்-கட மையாற்றுபவர்களுக்கு - வருடத் துக்கு இரண்டு மாத சம்பள விகி தத்தில் அல்லது 12 மாதச் சம்பளம் மொத்தத் தொகையாக வழங்கப்ப டும்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரிகளாக உள்ள வர்களுக்கு - 6 லட்சம் ரூபாவும், மத்தியதரத்தில் உள்ளவர்களுக்கு 5 லட்சம் ரூபாவும், சாதாரண தரத் திலுள்ளவர்களுக்கு, 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஓய்வுபெறுபவர்கள் மீண்டும் அரசாங்கத் திணைக்களங் களில் அல்லது அதனைச் சார்ந்த நிறுவனங்களில் கடமையாற்றுவ தற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு

# கடந்த ஆறு மாத காலப்பகுதியில் 8425 மில்லியன் ரூபா வருமானம்

இலங்கைத்துறைமுக அதிகார சபைக்கு கடந்த ஆறு மாத காலத் தில் 8425 மில்லியன் ரூபா வருமா னம் கிடைத்திருப்பதாக, மேற்படி அதிகாரசபை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களுக்குள் பெறப்பட்ட இந்த வருமானம், கடந்த வருடம் - முதல் ஆறு மாதங்களில் பெறப்பட்ட வரு மானத்தைவிட 1287 மில்லியன் ரூபா அதிகம் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்புத் துறை முகத்தில், இந்த வருடம் - முதல் ஆறு மாதங்களில் ஒன்பது லட்சத்து 30 ஆயிரத்து 594 கொள்கலன்கள் கையாளப்பட்டதாகவும், கடந்த வரு டம் இந்தக் காலப்பகுதியில் எட்டு லட்சத்து 29 ஆயிரத்து 66 கொள் கலன்கள் கையாளப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நவீனரக துப்பாக்கிகள் இரத்தினபுரியில் சிக்கின

இரத்தினபுரி வலிகம்பொல பகு தியில் - பொலிஸார் நடத்திய தேடு தலின்போது, 6 நவீனரகத் துப்பாக் கிகள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக - பொலிஸார் பூரண விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆறு சந்தேகநபர்களைப் பொலி ஸார் கைதுசெய்து, விசாரணை களை மேற்கொண்டதாகத் தெரிய வருகின்றது.

# வெளிநாட்டுக்கு ஆட்களை கடத்தும் இந்தியப் பிரஜை ஒருவர் கைதானார்!

(கொழும்பு)

சட்ட விரோதமாக வெளிநாட்டுக்கு அனுப்ப, இந்தியர்களை - இலங் கைக்கு அழைத்து வந்தவர் எனக் கூறப்படும் இந்தியப் பிரஜை ஒருவரை, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

தன்னுடைய கடவுச்சீட்டு காணாமற்போயுள்ளதாக, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச்சென்றபோதே, இவர் கைது செய்யப்பட்டார்.

ஏற்கனவே, இவருடைய கடவுச்சீட்டை பொலிஸார் தங்காலையில் கண்டெடுத்துள்ளனர். அதனையடுத்து, அவரைக் கைதுசெய்யும்படி பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படை யிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார்.

# வட - கிழக்கு மாகாண ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

வட - கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைக ளில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றங்களுக்கான, விண்ணப்பங்களைக் கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

வலயத்துக்குள்ளான இடமாற்ற விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1 ஆம், 5 ஆம் திகதிக ளுக்கு இடையிலும், வலயங்களுக்கிடையிலான இடமாற்ற விண்ணப்பங்களை ஒக்டோபர் மாதம் 31ம் திகதிக்கு முன்னரும் - வலயக் கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக் குமாறு, மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார்.

மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்ற விண்ணப் பங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திக திக்கு முன்னரும், மாகாணங்களுக்கிடையிலான விண் ணப்பங்களை ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்ன ரும் அனுப்பிவைக்குமாறு, மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்ற விண்ணப்பங்கள் யாவும், பாடசாலை அதிபர் ஊடாக, அவரின் சிபாரிசுடன் குறித்த திகதிக்கு முன்னர் - வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இடமாற்ற சபையின் தீர்மானத்துக்கு அமைய முடிவு கள் மேற்கொள்ளப்பட்டு, ஒரு மாதத்துக்கு முன்னர் ஆசிரியர்களுக்கு இடமாற்றக் கடிதங்கள் அனுப்பப்படும்.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்ம ராசிக்கு கடந்த 23 ஆம் திகதி 6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி இன்று பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்கிறார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பர். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**



## துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதம்)

உங்களுக்குச் சகல சௌபாக்கியங்களும் கைகூடிவரும் காலம் இது. ஒரு பெரும் சிறைவாசத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டீர்கள். மிக நல்ல யோக பலன்களை இந்த ராசிக்காரர்கள் பெற்று அனுபவிக்கப் போகிற பொற்காலம் இது.

அட்டமத்துச்சனி காலத்தில் இழந்த எல்லாவற்றையும் பலமடங்கு அதிகமாகப் பெறுவீர்கள். இரண்டரை ஆண்டுச் சிறைவாசம் இந்த குருபெயர்ச்சியோடு நீங்கியது. சுதந்திரக்காற்றைச் சுவாசிப்பீர்கள்.

அரசியல்வாதிகள் முன்பு இழந்துவிட்ட பட்டம், பதவி, கௌரவம், புகழ் இவற்றை மீண்டும் பெறுவீர்கள். அரசு அதிகாரிகளுக்கு மகிழ்ச்சி தரும். பதவி உயர்வுடன் அதிகாரம், அந்தஸ்து உயரும்.

மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்கள் சிறந்து விளங்குகின்றன. கணிதம், கணினித்துறையில் புதியன படைத்து உயர்வும், பாராட்டும் பெறுவீர்கள்.

ஆய்வுத்துறை மருத்துவர் என்றால் - உங்கள் ஆய்வின் வழியாகப் புதிய மருந்துகள் அறிமுகமாகி, அமோகமான புகழையும் பாராட்டையும் பெறலாம். கலைத்துறையினருக்கு இது பொற்காலம். புதிய படைப்புகள் படைத்து வெற்றி, புகழ், செல்வம் இம்மூன்றையும் பெற்று மகிழ்வீர்கள். மக்களின் இதயம் கலந்த பாராட்டைப் பெறுவீர்கள்.

உயர் உலோகங்களான - வெள்ளி, தங்கம் இவற்றை வியாபாரம் செய்வோர் அமோக இலாபம் பெறுவீர்கள். திடீர் விலை உயர்வுகள் அமோகமான இலாபத்தைத் தந்து மனதையும், பணப்பெட்டியையும் நிரம்பச்செய்யும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிரம்பி இருக்கும். அடிக்கடி ஏற்படும் சுபகாரியங்களினால் வீடு கலகலப்பாக, விருந்தினரால் நிரம்பியிருக்கும்.

விவசாயிகளுக்குப் பூமிக்குக் கீழ் விளைவனவற்றால் இலாபம் கிடைக்கும். மற்றவை வரவும், செலவும் சரியாக இருக்கும். புதிய சொத்துக்கள், வாகன வசதி பெறுவீர்கள். திருமணத் தடைகள் நீங்கும்.

சான்றோர்கள், மகான்களின் நட்புக் கிடைக்கும். அவர்கள் - உங்களுககு நல்ல வழிகாட்டியாய் அமைவார்கள்.

**ஆடி**

தெய்வ நம்பிக்கை வலுவடையும். ஆடி மாதம் 31 ஆம் திகதி வரை உங்கள் வாக்கு மிகமிகக் கடுமையாக இருக்கும். இக்காலத்தில் நீங்கள் அவசியம் விநாயகரை வலம்வர வேண்டும்.

**ஆவணி**

வழக்குகள் உங்களுக்குச் சாதகமாகி, அதனால் பெரும் பொருட்கள் கிடைக்கும். நம்பிக்கை, நாணயம் மிகுந்த நண்பர்கள் கிடைப்பார்கள். மனத்தைரியம், தன்னம்பிக்கை எல்லை இல்லாமல் பெருகும். நல்ல கல்விமான் என்று பெயர் பெறுவீர்கள். நிலம் வாங்கும் யோகம் சிறக்கிறது. புதிய தொழிற்சாலை, வீடுகள் என இவை சிறக்கக் கிடைக்கும். சிலர் உத்தியோகத்தினால் நிரம்பச் சம்பாதிப்பார்கள். அறிவுபூர்வமான நண்பர்கள் கிடைப்பார்கள். புதிய வாகனச் சேர்க்கை உண்டு. சங்கீதத்தில் நாட்டம் பிறக்கும். அமைதியான வாழ்க்கை, நல்ல வேலைக்காரர்கள் அமைவார்கள்.

அரசின் உதவிகள் நிரம்பக் கிடைக்கும். எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் திறமையாக நிர்வாகம் செய்வீர்கள்.

**புரட்டாதி**

11.09.2003 முதல் 05.10.2003 வரை எவ்வளவு வருமானம் வந்தாலும் அனைத்தும் செலவாகும். இந்த நிலை 06.10.2003 முதல் சீர்பட்டுவிடும். உங்கள் ஆயுள் பரிபூர்ணமாகும் அளவுக்கு உடல்நிலை வலுவாக இருக்கும். உறுதியான சொத்துக்கள் கிடைக்கும். புகழ் மிக மிகப் பெருகும்.

**ஐப்பசி**

தந்தையாரின் உடல்நலம் கெடும். உங்கள் நற்குணங்கள் பெருகும். வீரப்பண்புகள் சிறக்கும். அரசு தொடர்பான தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். நீங்கள் கேது பிரீதி செய்துகொண்டு, கிரக தோஷ பரிகாரம் செய்து கொள்ளுங்கள்.

**கார்த்திகை**

வாக்கில் தடுமாற்றம் தோன்றும். உங்களை அறியாமல் பொய் பேசுவீர்கள். ரோஷக்காரராக மாறுவீர்கள். சகோதர, சகோதரிகளிடம் அன்பாக நடப்பீர்கள்.

**மார்கழி**

உங்கள் வாக்குச் சீர்படும். பொய்மை விலகும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் பெறுவர். கணிதம், கணிப்பொறித்துறைகளில் சிந்தனை சிறக்கும். குடும்பத்தில் தென்றல்வீசும். சுயமுயற்சியால் முன்னேறுவீர்கள்.

**தை**

நீங்கள் திருமணம் செய்து கொள்ளாதவராக இருப்பின், சொததுடன் மனைவி வருவாள். சங்கீதம், நாட்டியத்தில் விருப்பம் கொண்டவளாக இருப்பாள்.

பூமி மற்றும் வாகனவகை பொருட்கள் ஜீவ ஊற்றென வந்து கொண்டிருக்கும். செய்தொழில் இலாபம் கொடுக்கும். புதிய நகைகள், ஆடை, ஆபரணம் என இவை பெருகும்.

**மாசி**

நீங்கள் சிவனைப் பிரார்த்திக்க வேண்டும் அல்லது தவறாது திருமால் கோயில்களுக்குச் செல்ல வேண்டும். ஆடம்பரச் செலவுகள் கட்டுக்கு அடங்காமல் செல்லும்.

**பங்குனி**

அரசியல் பகைகளை வெல்லுவீர்கள். உங்கள் பகைவர்கள் இருந்த இடம் தெரியாது வீழ்வர். நெஞ்சில் கபம் கட்டும். சளித் தொல்லைகள் தோன்றும். வழக்குகள் உங்களுக்கு அனுகூலமாக நிறைவுபெறும்.

**சித்திரை**

உங்கள் பத்தினியின் எண்ணங்கள் சுருங்குகின்றன. உங்கள் உறவினர்களை அண்டவிடமாட்டார். அவருக்கு முன்கோபம் அதிகம். சிலரின் பத்தினிகள் அரசுப் பணியில் சம்பாதிப்பார்கள்., திருமணம் ஆகாதவராயின், திருமணம் சிறப்பாக நடைபெறும்.

உங்களில் சிலருக்கு 23.04.2004 இற்குள் திருமணம் நடந்தால், அழகான பணக்கார மனைவி அமைவார். அவர் உங்களை மிகமிக நேசிப்பவளாக இருப்பார். 02.03.2004-23.04.2004 வரை உங்கள் வாழ்வில் எதிர்பாராத வரவுகள் இருக்கும்.

**வைகாசி**

ஆயுதங்களைக் கையாள்வதில் கவனம் செலுத்துங்கள். உஷ்ணம் தொடர்பான நோய்கள் தோன்றலாம். தலைவலி, கண்தொல்லை தோன்றும். அரசு அதிகாரிகள் பகை தோன்ற வாய்ப்புள்ள மாதம். ஆமை அடங்கி இருப்பதுபோல், இம் மாதத்தில் உங்களை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அடக்கமாக இருந்துவிடுங்கள்.

**ஆனி**

தந்தையாரின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். உங்களுக்கு முன்கோபம் கொப்பளித்துக் கொண்டுவரும். இருப்பினும் நீங்கள் ஒரு நியாயவான். பரந்த மனப்பான்மை கொண்டவர் என்ற பெயர் பெறுவீர்கள்.

(விருச்சிகம் நாளை தொடரும்...)

# பளைக் கோட்டப்பாடசாலைகளில் மாலைநேர வகுப்புக்கள் ஆரம்பம்

ஜி.ரி.இசற் மற்றும் யுனிசெவ் ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் - பளைக்கோட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் மாலைநேர வகுப்புக்கள் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு மணித்தியாலங்கள் வரை நடைபெறவுள்ள இம்மாலை நேர வகுப்புக்களுக்கான பாடத்திட்டங்கள், வலயக்கல்விப் பணிமனையால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தரம் 2, 3, 4 ஆகிய வகுப்புக்களுக்கும் 6, 7, 8, 9 ஆகிய வகுப்புக்களுக்குமே தற்போது மாலைநேர வகுப்புக்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தரம் 10, 11 ஆகிய வகுப்புக்களுக்கு- மாலைநேர வகுப்புக்களுக்கான ஏற்பாடுகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (115)

## வீதி புனரமைப்பு

புலோப்பளை மேற்கு, மாதாகோவில் வதி, உலக உணவு ஸ்தாபனதத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் மணல் பாதையாக இருந்துவந்த இவ் வீதியை மக்கள் சிரமதானம் மூலம் புனரமைத்து வருகின்றனர். இச் சிரமதானத்தில் பங்குபெறும் மக்களுக்கு தலா 105 ரூபா பெறுமதியான உலர் உணவு - எதிர்வரும் வாரங்களில் பகிரப்படவிருக்கின்றது.



'வாழ்வகம்' விழிப்புலன் இழந்தோர் இல்லத்தின் 15 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்ட, வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் வாழ்வத்தின் 15 ஆவது ஆண்டு மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றுவதையும், அருகில் இல்லப் பொறுப்பாளர் செல்வி. அ.சின்னத்தம்பி, இதழாசிரியர் ஆ.இரவீந்திரன், கொழும்பு இணைப்பாளர் ப.கனக ராஜேஸ்வரன் உடுவில் உதவி அரசஅதிபர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் ஆகி யோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (101)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : தி.வினோஜன்
முகவரி : லவ்சான்,
சுவிஸ்லாந்து.

முதலாவது அகவையில்

பெயர் : எஸ்.கஸ்தூரி
முகவரி: கலட்டி லேன்,
கோண்டாவில்.



நான்காவது அகவையில்



பெயர் : ரி.ரிகன்
முகவரி: சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-------------------------------------
முகவரி :-------------------------------------
பிறந்த ஆண்டு:-------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
-----------------------
பெற்றார் ஒப்பம்



# பெற்றோர்களின் அளவுக்கதிகமான கட்டுப்பாடே மாணவர்களின் அடாவடித்தனங்களுக்கு காரணம்!

## உதவிக் கல்விப் பணிப்பாளர் தனபாலசிங்கம் உரை

(யாழ்ப்பாணம்)

ஐந்து வயதிற்குட்பட்ட பாலர்களுக்கான கற்பித்தல் என்பது, விளையாட்டின் மூலமே பயிற்றுவிக்கப்படல் வேண்டும். ஆடல், பாடல் மூலம் அவர்களை மகிழ்வித்து, அவர்களின் நுண்ணறிவை விருத்தி செய்யவேண்டும்.

ஐந்து வயது வரையுமே சிறுவர்களுக்கு நுண்ணறிவு வளர்ச்சியடைகின்றது. இக்கால கட்டத்தில் அவர்களின் செயற்பாடுகளுக்கு - கட்டுப்பாடு விதிக்கக்கூடாது, தடைபோடக் கூடாது என, சண்டிலிப்பாய் உதவிக் கல்விக்கோட்ட பணிப்பாளர் க. தனபாலசிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் உடுவில் இந்து இளைஞர் மன்றப் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் - சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் - இன்றைய மாணவர் சமுதாயம் அடாவடித்தனமாகவும், எவருக்கும் கட்டுப்படாதவர்களாகவும், தான்தோனறித்தனமாகவும் நடமாடுவதை நாம் எல்லோரும் அவதானிக்கின்றோம்.

இதற்கு, சிறுபராயத்தில் பெற்றோரின் அளவுக்கதிமான கட்டுப்பாடு, தடைவிதிப்பு போன்றனவே காரணமாகும்.

எனவே, பாலர்களை அன்பாகவும், அதிக அடக்குமுறையின்றியும் வளர்ப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும் எனவும் கூறினார்.

# புலிகளின் அலுவலகம் மீது வவுனியாவில் கிரனேட் வீச்சு

வவுனியாவில் புலிகளின் அரசியற்துறை அலுவலகம் மீது, திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் கிரனைட் தாக்குதல், நடத்தப்பட்டது. இதனால், அலுவலகம் சேதமடைந்ததுடன், அருகில் நின்றிருந்த அரசியல் பணியக உறுப்பினர் குட்டி என்பவர் காயமடைந்தார்.


இனந்தெரியாத நபர்களால், திடீரென நடத்தப்பட்ட இத்தாக்குதல் குறித்து, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு உடனடியாகத் தகவல் வழங்கப்பட்டதும், அவர்களது பிரதிநிதிகளும், பொலிஸாரும் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து, விசாரணைகளை மேற்கொண்டனர்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்





01) 'A' மிருக முகத்திற்குப் பொருத்தமான இன்னொரு முகத்தை B,C,D,E ஆகிய முகங்களிலிருந்து தெரிவுசெய்க.




02) பின்வரும் எப்பெயரின் எழுத்துக்கள் யாவும் நேர்கோடுகளால், ஆனவை எனக் கண்டு பிடித்து, அவ்வெழுத்தின் கீழ்க் கோடிடுக.

1. ARJUNA
2. RAN
3. SHIROMI
4. NILANTHI

03) கீழே ஒரே மாதிரியான வடிவங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து அவற்றின் மீதுள்ள நான்கு எழுத்துக்களையும் ஒன்று சேர்த்தால், ஒரு காட்டு விலங்கின் பெயர் கிடைக்கும். அவ்விலங்கு எது?





விடை..................................

4) கங்காரு ஒன்று, மணித்தியாலத்திற்கு 60 Km என்னும் வேகத்தில் தாவிச் செல்கின்றது. அது 3 மணித்தியாலங்களில் எவ்வளவு தூரம் தாவிச் செல்லும்?

1. 20 km
2. 120 km
3. 180 km
4. 300 km

05) கீழே தரப்பட்டுள்ள 6 பென்சில்களில் இரண்டு மட்டும் ஒரே மாதிரியானவை. அப் பென்சில்களைக் கண்டுபிடித்து, அப்பென்சில்களின் கீழ்க் கோடிடுக.




06) பின்வரும் எண்களில் எந்த எண் ஆயிரத்து நானூறுக்கும், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுக்குமிடையே உள்ளது.

1. 1050    2. 1300    3. 1590    4. 1990

07) சங்கரன் தனது கைச்செலவுக்கான பணத்தை 4 வாரங்கள் சேமித்துள்ளான். அவன் வாரம் ஒன்றுக்கு 32 ரூபாய் 50 சதம் சேமித்தான். அவன் நான்கு வாரங்களில் எவ்வளவு பணம் சேமித்திருப்பான்.

1. 130.00    2. 128.20    3. 128.00    4. 120.00

08) பிள்ளைகள் சிலர் தாம் விரும்பும் விளையாட்டைத் தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டனர். இவ் அட்டவணை அவர்களின் தெரிவுகளைக் காட்டுகின்றன.

| விளையாட்டு | பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| உதைபந்தாட்டம் | 10 |
| கிரிக்கெட் | 12 |
| வலைப்பந்தாட்டம் | 11 |
| ஹொக்கி | 07 |

எல்லாக் குழுக்களும் சமமாக இருப்பதற்கு விளையாட்டுக்களை மாற்றவேண்டிய பிள்ளைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

1. 1    2. 2    3. 3    4. 6

09) பின்வரும் வாக்கியங்களிலுள்ள பொருட்பெயர், சினைப்பெயர் ஆகியவற்றை நிரைப்படுத்துக.

1. மயில் தோகை விரித்து ஆடும்.
2. மேசையின் கால் உடைந்தது.
3. மல்லிகை மொட்டு மலர்ந்தது.
4. காகத்தின் சொண்டு கூர்மையானது.
5. அவன் காலால் ஓவியம் வரைந்தான்.

| பொருட்பெயர் | சினைப்பெயா |
|---|---|
| 1 ................ | .................... |
| 2 ................ | .................... |
| 3 ................ | .................... |
| 4 ................ | .................... |
| 5 ................ | .................... |

10) "விஞ்ஞான வளர்ச்சியால்...." என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல்வேண்டும்.

(1)..............................................
(2)..............................................
(3)..............................................
(4)..............................................
(5)..............................................
(6)..............................................

(தொடரும்)

### பெற்றோர்களின் கவனத்திற்கு...!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. (பாடத்திட்டத்திற்கு உட்பட்டு அமையும்) வினாக்கள் தயாரிக்கும் போது - மாணவர்களின் வயது, அறிவு, திறன், மனப்பாங்கு என்பன கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நிதானமாகச் சிந்தித்து, அறிவுறுத்தல்களை வாசித்து அதற்கமைய மாணவர்கள் செயற்படும்போது, இப்பரீட்சை கடினமானதாக அமையாது.

மாணவர்களை வற்புறுத்தி விருப்பின்றிக் கற்பிக்கின்றபோது - மாணவர்கள் மனநோயாளிகளாக மாறக்கூடிய அபாயமும் இருப்பதாகக் கல்வியாளர்கள் எச்சரிக்கின்றார்கள். பிள்ளைகளுக்கு வயதுக்கு மீறிய வினாக்கள் வழங்குவதையும், அவர்கள் மீது சுமக்க முடியாத கல்விச்சுமைகளை ஏற்றுவதையும் தவிர்க்கவும். இன்றேல்.....!


வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.


# க.பொ.த [சாதாரண] மாணவர்களுக்கான வழிகாட்டற்தொடர்


## விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்


1) பாரமானித் திரவமாக இரசம் பாவிக்கப்படுவதன் காரணத்தைச் சரியாக விளக்குவது.
   1. இரசம் சீரான வெப்ப விரிவு உடையது.
   2. இரசம் எளிதில் ஆவியாவது இல்லை.
   3. இரசத்தின் அடர்த்தி மிக உயர்வானது.
   4. இரசத்தைத் தெளிவாக அவதானிக்கமுடியும்.

2) தரப்பட்ட மின் சுற்றுக்களில் ஒரே அளவான தடைப் பெறுமானத்தைக் கொண்டிராதது.

1.



2.




3.




4.




3) தரப்பட்ட நான்கு மூலகங்களின் நடத்தையை நன்கு அவதானிக்கவும்,
   A- சூடானநிலையில் கொதிநீராவியுடன் தாக்கமடையும்.
   B- இதன் காபனேற்றை நன்கு சூடாக்கியபோது, B ஐ மூலகமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
   C - சூடான நீருடன் தாக்கமடைகிறது.
   D- நீரில் இடப்பட்டதும் உக்கிரமாகத் தாக்கி, தீப்பிடித்து எரியும்.
   இம்மூலகங்களைத் தாக்குதிறன் அடிப்படையில் ஏறுவரிசையில் எழுதினால், அமையும் ஒழுங்கு.
   1. B < A < C < D
   2. D < C < A < B
   3. A < B < C < D
   4. C < A < D < B


4) $60^0$ C இல் உள்ள 400g நீரை $30^0$ C வரை குளிர விட்டபோது, அது சூழலுக்கு இழந்த வெப்பம் யாது? நீரின் த. வெ. கொ. :- 4200 J/kg $^0$C
   1) 400 x 4200 x 30 J
   2) 400 x 4200 x 60 J
   3) $\frac{400}{1000}$ x 4200 x 30 J
   4) $\frac{400}{1000}$ x 4200 x 60 J

5) மரத்திலிருந்து கீழே நிலைக்குத்தாக விழும் காயொன்றின் இயக்கத்தைக் காட்டும் வேகநேர வரைபு.


1.




2.




3.




4.



6) தரப்பட்ட கருவிகளில், ஒளிக்கதிரின் பாதையைத் தவறாகக் காட்டுவது.

1.



2.



3.



4.



7)


| மூலகம் | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| புரோத்தன் எண் | 16 | 17 | 18 | 14 | 16 |
| நியூத்திரன் எண் | 17 | 18 | 18 | 15 | 18 |

தரப்பட்ட அட்டவணையில் உள்ள மூலகங்களில் சமதானிகள் எனக் கருதக்கூடியவை

1. A,E  2. B,C  3. A,D  4. C,E


8) இழைய வளர்ப்பு என்னும் செயற்கை இனப்பெருக்க முறையில் காணப்படும் நன்மை யாது?
   1. மிக இலகுவாக இளந்தாவரங்களை உருவாக்கலாம்.
   2. பெற்றோரை முற்றிலும் ஒத்த அதிகளவு இளம் தாவரங்களை உருவாக்கல்.
   3. புதிய இயல்புகள் உடைய தாவரங்களை உருவாக்கல்.
   4. புதிய இளந்தாவரங்களை உருவாக்கும் விதைகள் பெறப்படுகின்றன.

9) தாவர இலை ஒன்றினுள் புகும் x, y, z என்னும் காரணிகளுக்குப் பொருத்தமான பதார்த்தங்களைச் சரியாகத் தருவது.





| | x | y | z |
|---|---|---|---|
| 1. | ஒளி | வளி | நீர் |
| 2. | ஒளி | நீர் | வளி |
| 3. | வளி | நீர் | ஒளி |
| 4. | நீர் | வளி | ஒளி |

10) தரப்பட்ட அலையின் அலை நீளமும் வீச்சமும் முறையே




1. 300 m, 150 m  2. 150 m, 75 m
3. 600 m, 300 m  4. 150 m, 150 m

11) தரப்பட்டவற்றில் மாறும் தடையைக் குறிக்கும் குறியீடு எது?




12) தரப்பட்ட தொழிற்பாடுகளில் தெறிவினை எனக் கருதமுடியாதது.
   1. சூடான பொருளில் முட்டிய கை உதறுதல்.
   2. கண் இமைத்தல்.
   3. ஆபத்து ஒன்றிலிருந்து சடுதியாக விலகுதல்.
   4. கணிதப் புதிர் ஒன்றை விரைவில் விடுவித்தல்.

13) தரப்பட்ட செயற்பாடுகளுள் இயற்கைக்குப் பொருத்தமான செயற்பாடு.
   1. வயல் நிலங்களுக்கு யூரியா சேர்த்தல்.
   2. நீர் தேங்கும் குட்டைகளில் சிறிய மீன்களை வளர்த்தல்.
   3. வயல் வெளியிலுள்ள புற்களை வெட்டி அகற்றல்.
   4. மீன்களிற்குப் பதிலாகக் காட்டு விலங்குகளை உண்ணப் பழக்குதல்.

14) தரப்பட்ட கூற்றையும் அதற்குக் கூறப்பட்ட காரணத்தையும் அவதானிக்கவும்

கூற்று:- சோடியமானது மண்ணெய் அல்லது பரவீன் எண்ணெயில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

காரணம் :- நீருடனும், வளியுடனும் சோடியம் நன்கு தாக்கக்கூடியது. மண்ணெய் போன்றவற்றுடன் சோடியம் தாக்கமாட்டாது. மேற்படி கூற்று, காரணம் தொடர்பாகச் சரியான முடிவு.
   1. கூற்றும் காரணமும் சரியானவை.
   2. இரண்டும் தவறானவை.
   3. கூற்று சரி, காரணம் சரியானதன்று.
   4. கூற்று தவறானது, காரணம் உண்மை.

15) சுற்றுலா சென்ற மாணவர் குழு ஒன்று கிளை விட்டிருந்த பெரிய பனை போன்ற மரம் ஒன்றைக் கண்டனர். அது தொடர்பாக, அவர்கள் எடுத்த முடிவு.
   1. அது பனையாக இருக்கமுடியாது.
   2. அதில் கிளை போன்றுள்ளது மேலொட்டித் தாவரமாகும்.
   3. இயற்கையில் சில புற நடைகள் உள்ளன.
   4. சுற்றுலா காரணமாக கண்பார்வை மாணவர்களுக்குச் சரியாக அமையவில்லை.

(தொடரும்)

பு. ஸ்ரீஸ்கந்தராஜா
யாழ். மத்திய கல்லூரி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு
- திருக்குறள்

# நமது நோக்கு

## சங்காரம் நிசம்!

தென்னிலங்கை அரசியல் களத்தில், எப்போதுமே சர்ச்சைக்குரிய நபராக இருப்பவர் - அனுரா பண்டாரநாயக்க. இவர் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க - சிறிமாவோ ஆகியோரின் புதல்வர் என்ற அடிப்படைத் தகுதியுடன் காலத்தைக் கடத்தப் பார்ப்பவர்.

ஏனோ இவர் சென்ற இடமெல்லாம் - சறுக்கல்களும், வீழ்ச்சிகளும் நிரந்தரமாகிவிட்டன. 1993 இல் இவர் ஐ.தே.கவுக்கு சென்றார் - அந்தக்கட்சி ஆட்சியை இழந்தது.

பின்னர், மீண்டும் தனது தாய்க்கட்சிக்குத் திரும்பினார் - அங்கும் இவரது துரதிர்ஷ்டம் நீடித்தது. பொ.ஐ.மு ஆட்சி அதிகாரத்தை இழந்துவிட்டது.

இப்போது - பொ.ஐ.முவிற்குள் தனது செல்வாக்கைப் பலப்படுத்திக்கொண்டு, கட்சியின் தலைமைத்துவத்துக்காகப் பெரும் போராட்டம் நடத்தி வருகிறார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித்தலைவர் பதவியைப் பிடித்து, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை கட்சியில் ஓரங்கட்டுவதற்கு, இவரும் இவரது ஆதரவாளர்களும் பெரும்பாடுபட்டு வருகின்றனர்.

ஆனால், இதுவரையில் இந்த முயற்சி கைகூடவில்லை - ஆனால், அனுராவும் விடாப்பிடியாக-கட்சியின் தலைமையை தனக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இவரது இப்போதைய குறி - அடுத்த ஜனாதிபதி தேர்தல் என்பது வெளிச்சமாகியுள்ளது. அடுத்த இரண்டரை ஆண்டு காலங்களில் வரப்போகும் ஜனாதிபதி தேர்தலில் - சந்திரிகா குமாரதுங்காவினால் போட்டியிட முடியாது.

காரணம் - அவர் ஏற்கனவே இரண்டு பதவிக் காலங்கள் ஜனாதிபதியாக இருந்துள்ளார். இன்னொரு தடவை அவரால் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிட முடியாது.

இதனால்தான், எதிர்க்கட்சிக் கூட்டணிக்குள் குழப்பம் நிலவிவருகின்றது. மகிந்தவுக்கும், அனுராவுக்கும் இடையிலான பூசல்கள் தொடர்ந்து நீடித்து வரும்நிலையில், மகிந்தவை விட, தன்னால் அதிக வாக்குகளைப் பெறமுடியும் என்றும் - இதற்கு ஜே.வி.பியினரின் ஆதரவும் தமக்கு நன்கு உதவியாக இருக்குமென்றும் கூறியிருந்தார்.

இப்போது - 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய' கதையாக, சிங்களப் பத்திரிகைப் பேட்டியொன்றில், ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர் றோஹண விஜேவீரவைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

விஜேவீர ஒரு 'கொலைகாரன்' என்று, அனுரா விமர்சிக்கப்போய் - ஜே.வி.பியினர் அவர்மீது வரிந்து கட்டிக்கொண்டு சொற்போரில் குதித்துள்ளனர்.

எங்கே - எப்போது - எதைப்பற்றிப் பேசுவது என்று தெரியாமல் நடந்து கொள்வதாலேயே, அனுராவுக்கு இந்தநிலை. ஜே.வி.பிக்கும், பொ.ஐ.முவுக்கும் இடையில் கூட்டணி உடன்பாடு உருவாகுமெனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில், அதுவும் இடைநடுவில் நிற்கிறது.

இரு கட்சிகளுக்கும் இடையில், பொதுவான இணக்கப்பாட்டை உருவாக்குவதில் தோல்விகண்டுள்ளதாலேயே, கூட்டணி இழுபறிக்குள் சிக்கியுள்ளது.

இந்த நிலையில் - அனுரா கிளப்பியுள்ள சர்ச்சைகள், ஜே.வி.பி - பொ.ஐ.மு கூட்டணியில் சர்ச்சையை மேலும் அதிகரித்திருக்கிறது. வெறும் ஆட்சி அதிகாரத்துக்காக - அதிகாரத்தைப் பங்கிடுவதற்காக - அமைக்கப்படவிருந்த இந்தக் கூட்டணி, இன்று கேள்விக்குரியதாகி நிற்கிறது.

இந்தக் கூட்டணியின் முக்கியமான நோக்கம் - சமாதான முயற்சிகளுக்கு விரோதமாகச் செயற்படுவது என்பதில், எவ்விதச் சந்தேகமும் இல்லை. சமாதானத்தினைக் குழப்ப முயற்சித்த சக்திகள், இப்போது தமக்கிடையில் உடன்பாடு காணமுடியாமல் - ஒருவருக்கொருவர் முட்டிமோதிக்கொள்ளும் நிலையில் இருக்கின்றனர்.

'பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு' என்று பாரதிதாசன் பாடிய பாடல்களே இங்கு நினைவுக்கு வருகின்றன. அனுரா, ஜே.வி.பியினருக்கும் இந்தப் பாடல் பொருத்தமானதே.

# பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் ஆங்கில மொழிமூலமான கற்பித்தலுக்குத் தடை

## வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு சுற்றுநிருபம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு வகுப்புகளில், ஆங்கிலமொழி மூலம் கற்பித்தலை மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளதாக - மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலைகளில், ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் ஆங்கில மொழிமூலம் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவந்தால், அதனைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு - அவர் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் சுற்றுநிருபம் மூலம் கேட்டுள்ளார்.

உயர்தர விஞ்ஞானப் பாடங்களையும், தரம் 6 மற்றும் தரம் 7 வகுப்பிலுள்ள சில பாடங்களையும், ஆங்கிலமொழி மூலம் கற்பிப்பதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், சில பாடசாலைகளின் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கில மொழிமூலம் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வாய்மொழிமூல ஆங்கில உபயோகத்தினால் மாணவர்களிடையே ஆங்கில மொழித்திறனை வளர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், கொள்கையளவில் ஆங்கிலமொழிமூலம் ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தல் முறை ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விதிமுறைகளை மீறும் பாடசாலைகள் பற்றிய தகவல்களை, கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் அமைச்சின் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# விமானப் பயணிகள் மீது கெடுபிடிகள் அதிகரிப்பு!

## விசனம் தெரிவிக்கின்றனர் பயணிகள்

யாழ்ப்பாணத்துக்கும் - கொழும்புக்கும் இடையே விமான மூலம் பிரயாணம் செய்யும் பயணிகள் மீது, விமான நிலையத்தில் வைத்து விமானப்படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதாக, பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தனியார் விமானசேவையினை நடத்தும் ஊழியர்களும், விமான நிலையத்திற்குப் பயணிகளை அழைத்துச் செல்லும் போது, கூடவே செல்வது வழமை. எனினும், அவர்கள் கூட விமான நிலையத்திற்குள் உட்செல்ல இப்பொழுது அனுமதிக்கப்படுவதில்லை.

அத்துடன், பயணிகளின் பயணப் பைகள் மிகத் தீவிரமாகச் சோதனையிடப்பட்டும் வருகிறது. இதனால், பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

# புகையிரத அதிகாரசபை இந்திய நிறுவனமொன்றிடம்!

## ஊழியர் தொழிற்சங்கம் குற்றச்சாட்டு

இலங்கைப் புகையிரத சேவைகள் அதிகாரசபையை - இந்திய நிறுவனமொன்றிற்குக் கையளிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக, ஊழியர் தொழிற்சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

புகையிரத சேவைகள் அதிகாரசபை நட்டத்தில் இயங்கி வருவதால், புகையிரத சேவைகளுக்குரிய கட்டணத்தை 75 வீதமாக உயர்த்துவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புகையிரதத் திணைக்களம் - அதிகாரசபையாக மாற்றப்பட்டதால், சுமார் 20 ஆயிரம் ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், தொழிற்சங்கத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையிலுள்ள எண்ணெய் நிறுவனங்களையும், இந்திய நிறுவனமொன்று கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்புலிகள் பயிற்சியாம்!

## இராணுவ வட்டாரங்கள் தகவல்

கடற்புலிகளின் ஒரு தொகுதிப் படகுகள், முல்லைத்தீவுக்கு அப்பாலுள்ள கடற்பகுதியில், தாக்குதல் பயிற்சிகளில் ஈடுபட்டதாக, இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை காலை - கடற்புலிகளின் ஆறு பீரங்கிப் படகுகள் இந்தத் தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாகவும், இது தொடர்பான தகவல், கடற்படையினரால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டு - கடற்கண்காணிப்பாளர்கள் அங்கு சென்றபோது, கடற்புலிகளின் படகுகள் அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டதாகவும், இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கொழும்பு அலுவலகமும், இந்தச் சம்பவத்தை உறுதிப்படுத்தியுள்ளது. கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர்டோட்ரயர் இது குறித்துக் கருத்து வெளியிட்டபோது,

இந்தத் தாக்குதல் பயிற்சி பற்றிய தகவலை, கடற்கண்காணிப்புக்குழுவிற்கு, கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் கடற்படையினரால் தரப்பட்டதாகவும், நான்கு டோறா படகுகளில் அப்பகுதிக்கு பி.ப. 1.30 மணிக்கு கடற்கண்காணிப்பாளர்கள் சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், இந்தத் தாக்குதல் பயிற்சியின்போது, கடற்புலிகளால் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்ட அவர், இது ஒரு வழமையான நடவடிக்கை எனப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அப்பகுதிக்குக் கடற்கண்காணிப்பாளரை ஏற்றிச்சென்ற கடற்படையின் டோறா படகுகள், முல்லைத்தீவுக் கரையிலிருந்து மூன்று கடல்மைல் தொலைவில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

# வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் பயிற்றுநருக்கான பயிற்சிப் பட்டறை!

(யாழ்ப்பாணம்)

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் - யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம், வலைப்பந்தாட்ட பயிற்சியாளருக்கான பயிற்சிப்பட்டறையொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் நடைபெறும் இப்பயிற்சிநெறியில், ஒவ்வொரு கழகங்களிலிருந்தும் ஒரு பயிற்சியாளரை, இப்பயிற்சிப் பட்டறைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறிக்கு வருகை தரும் பயிற்சியாளர்கள், தமது பெயரை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எப்.ஜே.ரூபசிங்கத்திடமோ அல்லது யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறையைச் சேர்ந்த ராதை அருளம்பலத்திடமோ பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## நாணய மாற்று விகிதம

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விபரங்கள் வருமாறு:-

| | வாங்கும் விலை (ரூ.ச.) | விற்கும் விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.86 | 97.32 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 157.18 | 158.57 |
| 1 யூரோ | 111.04 | 112.23 |
| 1 சுவிஸ் பிராங் | 71.51 | 72.78 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.98 | 64.99 |
| 1 ஜப்பானிய யென் | 0.80 | 0.81 |
| 1 சவூதி றியால் | 25.91 | 25.91 |

# யாழ். சமுர்த்தி வங்கிகளில் 28.4 மில்லியன் ரூபா சேமிப்பு

## பணிப்பாளர் நாயகம் தகவல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில், 32 சமுர்த்தி வங்கிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவற்றில் 24 வங்கிகள், ஏற்கனவே திறக்கப்பட்டு, தமது பணிகளை ஆரம்பித்துள்ளன. மிகுதியாகவுள்ள 8 வங்கிகள் - மூன்று மாதகாலத்துக்குள் திறந்து வைக்கப்படும் என்று, சமுர்த்தி அதிகாரசபைப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 232 குடும்பங்கள், சமுரத்தித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில், சமுர்ததிப் பயனாளிகளால், சமுர்த்தி வங்கிகளில் 28.4 மில்லியன் ரூபா சேமிப்பாக இடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 2330 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 146 சமுர்த்தி முகாமையாளர்களும் - அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# உவர்நீர் தடுப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே இன்றைய முக்கிய பணி!

யாழ். குடாநாட்டின் மத்தியில்-வலி. கிழக்கு பிரதேசத்தின் எல்லைக் கிராமமாக வாதரவத்தையும், வடமராட்சிப் பிரதேசத்தின் எல்லைக் கிராமமாக கப்புதூரும் உள்ளன. இக்கிராமங்களை ஏனைய பிரதேசங்களோடு சரிநிகராக அபிவிருத்தி செய்வதற்கு உரியவர்கள் ஆவண செய்யவேண்டும்.



ஒரு சிலர் "ஏன் இந்த உப்புத் தரையைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு இருக்கிறியள் இக்கிராமங்களை அபிவிருத்தி செய்வதிலும் பார்க்க, இக்கிராமமக்கள் வீதி வசதி, மின்சார வசதி, நன்னீர உள்ள இடத்திற்குச் செல்லலாம்" என்கிறார்கள்.

இங்கே நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். குடாநாட்டின் பெரியதொரு நிலப்பரப்பை, நீர்ப்பரப்பை வீணடிக்க விடக்கூடாது. இரண்டாவதாக - இப் பிரதேசம் உவர்நீரினால் காவுகொள்ளப்படும்போது, குடாநாட்டிற்கு உவர் நீர் அச்சுறுத்தல் ஏற்படும். உதாரணமாக - கப்புதூர், வாதரவத்தைப் பிரதேசங்கள் 1960 -1970 காலப்பகுதியில் நன்னீர் பிரதேசமாக இருந்தன. ஆனால், இன்று இப்பகுதி உவர்நீர் நிலைகளையே கொண்டுள்ளது.

கரவெட்டி தெற்குப் பிரதேசங்கள் - உவர்நீராவதைக் காணமுடிகின்றது. நாளடைவில் நன்னீர் என்று கூறும் பிரதேசங்களை, நாம் குடாநாட்டில் காணமுடியாது. குறிப்பாகச் சொல்லப்போனால் - கடல் ஏரியை அண்மித்த பிரதேசங்கள் தற்பொழுது உவர்நீராகவும், சற்றுத் தொலைவிலுள்ள பிரதேசங்கள் உவர்நீராகிக்கொண்டு வரும் பிரதேசங்களாகவும் உள்ளன.



குடாநாடு அபிவிருத்தி அடைய வேண்டுமானால், உவர்நீர் அபாயம் நீக்கப்படவேண்டும்.

இதற்கு என்ன செய்வது? கடல் நீர் ஏரிகளையும் (அந்தணந்திடல்-சரசாலை சதுப்பு நிலக்காட்டிலிருந்து ஆரம்பிக்கும் செம்மணிக் கடல்நீர் ஏரி, முள்ளிச் சதுப்புநிலக் காட்டிலிருந்து ஆரம்பிக்கும் தொண்டமனாறு கடல்நீர் ஏரி) முழுமையாக ஆய்வுசெய்யவேண்டும்.

ஓர் முழுமையான திட்டத்தை உருவாக்கி, அத்திட்டத்திற்கு வேண்டிய நிதியைத் திரட்ட வேண்டும். குடாநாட்டில் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குளங்களில் நீரில்லை, நிலமுமில்லை. ஏனெனில், குளம் என்று கருதி அமைக்கப்பட்ட பிரதேசங்கள் பயன்பாடற்ற மண் புட்டிகளால் காவலிடப்பட்ட தரைகளாக உள்ளன. முழுமையான ஓர் திட்டமின்றி உவர்நீரத் தடுப்பு என்பது சாத்தியப்பட முடியாது.

கிடைக்கும் நிதியைச் செலவீடு செய்யாததே இலங்கையின் அபிவிருத்தி நடைமுறை என்றபோதும், இந்நிலை மாறவேண்டும். கிடைக்கும் நிதியைச் செலவிடும் திட்டங்களை உருவாக்காது, அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியைத் தேடிச் செய்வதே சிறந்தது. அதாவது, நிதிக்கு அபிவிருத்தித் திட்டம் அல்ல, அபிவிருத்தித் திட்டத்திற்குத்தான் நிதி என்ற நிலை உருவாகவேண்டும். யாழ். குடாநாட்டின் மத்திய பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு, பின்வரும் நடவடிக்கைகள் பின்பற்றப்படவேண்டும்-

முள்ளிச் சதுப்புநிலக்காடு, கப்புதூர் கண்டற்காடு என்பன, யுத்த இடப்பெயர்வினால் முற்றாக அழிக்கப்பட்டு - தற்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக கண்டல் மரங்கள் தளிர்விடுகின்றன. இவை இனிமேலாவது அழிக்கப்படாது பாதுகாக்கப்படவேண்டும்.

இப்பிரதேசங்களில் புதிய சதுப்பு நிலக்காடுகளை உருவாக்குதல், அவற்றினை வன பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பாதுகாத்தல்.

சதுப்புநிலக் காடுகளில் இயல்பாகக்கூடும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பறவைகள் - வெடிச்சத்தங்கள், வேட்டையாடப்படுதல் போன்றவற்றைத் தடுப்பதற்கு இப்பகுதி - பறவைகள் சரணாலயமாகப் பதிவு செய்தல்.

உவர்நீர்த் தடுப்பின் முதலாவது கட்ட நீர்த்தேக்கங்களை, சதுப்பு நிலக்காடுகளை முழுமையாகப் பயன்படுத்தி அமைத்தல்.




வயல்களுக்கு இடையே காணப்படும் சகல நீர்த்தேக்கங்களையும்- உவர்தடுப்பு அணைகள், சுருங்கைகள் மூலம் குளங்களாக மாற்றுதல்.

மழைகாலத்தில் மிதமிஞ்சிய நீர் வெளியேறுவதற்கான கால்வாய்களை அமைத்தல்.

கப்புதூர் வெளி, நீர்வேலி வெளிகளில் காணப்படும் மேய்ச்சல் தரைகளின் பரப்பளவை அதிகரித்தல். நல்ல புல்லினங்களை அங்கே வளர்த்தல்.

சவுக்கு, தேக்கு போன்ற மரங்களின் நடுகையை, இந்த வெளிகளில் மேற்கொள்ளுதல். உள்நீர் நிலைகளில் மீன், இறால் வளர்ப்புத்திட்டங்களைச் செய்தல்.

கடலுடன் கடல்நீர் ஏரி கலக்கும் இடங்களில் - கோடைகாலத்தில் கடல் நீர் உள்வராது முழுமையாகத் தடுப்பதுடன், மாரிகாலத்தில் நீரோட்டத் தேவைக்கேற்பத் தடுத்தல் வேண்டும்.

இந்தப் பத்துச் செயற்திட்டங்களையும் மிகவும் நுட்பமாகச் செயற்படுத்தப்படுமாக இருந்தால், 10 வருடங்களுக்குள் நிச்சயமாக நல்ல பலனை அடையமுடியும்.

உவர்நீர் தடுப்புக்கு அடுத்ததாக- வீதி என்ற விடயத்தை நாம் நோக்குவோம். குடாநாட்டில் மத்திய பிரதேசத்தில் வீதிகள் இல்லாததினால் - வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மக்கள் பல மைல் தூரங்களைக் கூடுதலாகப் பயணிக்க வேண்டியுள்ளது. உதாரணமாக - வரணியிலிருந்து ஆவரங்காலுக்கு வருவதற்கு இப்பிரதேசத்தினூடாக வரும் தரவைப்பாதை எட்டுக் கிலோ மீற்றர். ஆனால், வடமராட்சி சென்று வல்லையினால் அல்லது தென்மராட்சி சென்று கனகம்புளியடி - புத்தூர் வீதியால் வருவதாயின், 20 கிலோ மீற்றர்களுக்கு மேல் பயணிக்க வேண்டும்.

இப்பிரதேசங்கள் பல பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இடைப்பட்டதாக இருப்பதனால், இங்கு எந்தவொரு வீதியும் இதுவரை அமைக்கப்பட வேண்டும் என்று, எந்தவொரு பிரதேசசபையும் கருதவில்லை.

எனவே, இப்பிரதேசங்களை இணைத்துப் பெருந்தெருக்கள் திணைக்களம் - வீதி அமைக்க வேண்டுமென வலியுறுத்திக் கூறுவதுடன், வீதி அமைக்கக்கூடிய சரியான மார்க்கத்தையும் இங்கு தெரிவிப்பது பொருத்தமானது.

ஆவரங்கால் - வாதரவத்தை - கப்புதூர் வீதி, கப்புதூர் - குயிலங்கண்டடி (கரணவாய் தெற்கு) வீதி, கப்புதூர் - வரணி வீதி, ஆவரங்கால் சந்தியடி - கப்புதூர் வீதி ஆகியன சில முக்கியமான போக்குவரத்து வீதிகளாக மாறும் என்பதைக் கருத்திற்கொண்டு, **AB** தரத்திலோ அல்லது **B** தரத்திலோ வீதிகளை அமைத்தல்வேண்டும் என்பது, முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

வீதிகள் சரியாக அமையும் போது, இப்பிரதேசத்தினதும் குடாநாட்டினதும் விதியும் மாறும் என்பது, எமது அசைக்கமுடியாத நம்பிக்கை. வீதியோடு மின்சாரமும் வந்து கிடைப்பின், இக்கிராமங்கள் ஒளி பெறும். இத்திட்டம் நிறைவேறினால், கிடைக்கும் பலன்கள் ஏராளம். அதுபோலப் பயன்பெறுபவர்களையும் எண்ணில் வரையறுத்துக் கூறமுடியாது.

எனவே, குடாநாட்டின் அபிவிருத்தித் திட்டங்களே - முதன்மையான திட்டமாக இதனைக் கொள்ளவேண்டும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்கமுடியாது.

யாழ். குடாநாட்டு மக்கள் சார்பாக இந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்வைப்பதுடன், அவர்கள் அனைவரும் இத்திட்டம் செயற்படுத்தபபடுவதில் தம்மால் இயன்ற பங்களிப்பைச் செலுத்தவேண்டும். நீரோட்டம், நீர்த்தேக்கம் பற்றிய தமது அனுபவங்களைக் குறுகிய வட்டங்களுக்குள் அல்லாமல், குடாநாட்டைப் பாதுகாக்கும் நீண்டநோக்குடன் வெளிப்படுத்தி, சரியான திட்டமிடலைச் செய்ய உதவவேண்டும்.

அதாவது, பொதுவாக முள்ளியிலிருந்து செல்வச்சந்நிதி நோக்கி, தொண்டமனாறு கடல் நீர் ஏரியும், கப்புதூர் கண்டல்காட்டுப் பிரதேசத்திலிருந்து வாதரவத்தை, நீர்வேலி, செம்மணி ஊடாக செம்மணிக் கடல்நீர் ஏரியும், நீரோட்டத்தைக் கொண்டுள்ளன.

இவை ஒவ்வொரு பிரதேசத்திலும் தடுக்கப்பட வேண்டும். இதற்கு உவர்தடுப்பு அணைகளும், கதவுகள் கொண்ட மதகுகளும் பயன்

*பரமேஸ்வரன்*

படுத்தப்பட வேண்டும். இவற்றில் சில உவர் தடுப்பணைகளை வீதிகளாகவும் பயன்டுத்தமுடியும்.

உதாரணமாக - பருத்தித்துறை, சாவகச்சேரி வீதியில் தேவையான மதகுகள் இனங்கண்டு, தடுப்புகள் போடலாம்.

அதேபோல, கப்புதூர் - கோயிலாக்கண்டி வீதியை அடுத்த கட்ட நீர்த்தேக்கத் தடையாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு நாவற்குழி - செம்மணி வீதிகளையும் பயன்படுத்த முடியும்.

இத்திட்டத்திற்குப் பலகோடி ரூபாய் தேவை என்பது வெள்ளிடைமலை. ஆனால், அதற்காக அதனைச் செய்யாது விடமுடியாது. கிடைக்கப்போகும் நிதியில் ஏனைய சிறு அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகளைத் தவிர்த்து - அதாவது, இத்திட்டத்தை யாழ். குடாநாட்டின் மத்தியில் வீதிகளாக உவர்தடுப்பு அணைகளை அமைத்து, விதியை மாற்றுவோம்.

குடாநாட்டின் நிலத்தடி நீர் - உவர் நீராவதைத் தடுக்கமுடியாவிட்டால்- மத்திய கிழக்கு நாடுகள் போல, எமக்கு நன்னீர், விலை கொடுத்தும் வாங்கமுடியாத பொருளாகிவிடும்.

# மிருகங்களினால் பரவும் நோய்கள்

மிருகங்கள் பல்வேறு தேவைகளுக்காக வீடுகளிலும், பண்ணைகளிலும் வளர்க்கப்படுகின்றன. இந்த மிருகங்களினால் மனிதருக்கு நன்மைகள் கிடைக்கின்ற அதேவேளையில், தீமைகளும் ஏற்படுகின்றன. தீமைகளுள் முக்கியமானவை மிருகங்களிலிருந்து மனிதருக்குத் தொற்றுகின்ற நோய்களாகும். மனிதருக்கு ஏற்படும் பல நோய்கள் வளர்ப்பு மிருகங்களிலிருந்து மனிதருக்குத் தொற்றியவை என்பதை, எம்முள் அநேகமானோர் உணர்வதில்லை. இதனால், இவர்கள் விலங்குகளிலிருந்து, மனிதருக்குத் தொற்றும் நோய்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதில்லை. இதன் விளைவாக எம்மத்தியில் சுகதேகிகள் குறைந்துவிட்டனர், நோயாளிகள் மிகுந்துவிட்டனர். பெரும் எண்ணிக்கையில் வைத்தியசாலைகளுக்குச் செல்லும் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க முடியாது, வைத்தியசாலைகள் திணறுகின்றன. நோயாளிகளால் வாட்டுகள் நிரம்பி வழிகின்றன.

மிருகங்களிலிருந்து, மனிதருக்குத் தொற்றும் நோய்களை மனிதருக்கும் விலங்குகளுக்குமிடையே பரிமாறப்படும் நோய்கள் **(Zoonatic diseases)** என அழைக்கப்படும். இந்த நோய்களால் பாதிக்கப்பட்ட விலங்குகளில் - நோய்க் குணங்குறிகள் தென்படலாம் அல்லது நோய்க்குரிய குணங்குறிகள் வெளியே தோன்றாதநிலையில், காவிகளாகவும் இருக்கலாம். நோய்க்கிருமிகளைக் கொண்டுள்ள மிருகங்களின்- மலம், சலம், இறைச்சி, உமிழ்நீர், இரத்தம், பிறப்புறுப்பு வழியாக வெளியேறும் பதார்த்தங்கள் போன்றவை மனிதர் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள், குடிநீர் போன்றவற்றுடன் கலக்கும்போதும், காயங்கள், புண்கள், .மிக நுண்ணிய கீறல்கள், சிதைவடைந்த தோல் என்பவற்றுடன் தொடுகை ஏற்படும்போதும், மனிதருக்கு இந்த நோய்கள் தொற்றுகின்றன. மிருகங்களை நேரடியாகக் கையாள்பவர்களுக்கும், இறந்த விலங்குகளின் இறைச்சி, தோல், உரோமம் என்பவற்றைக் கையாள்பவர்களுக்கும் இந்த நோய்கள் தொற்றும் அபாயம் அதிகம் உண்டு. இந்த வகையான நோய்த் தொற்று - விலங்குநோய்த் தொற்று **(Zoonatic infection)** என அழைக்கப்படும்.

மிருகங்களிலிருந்து மனிதருக்குப் பரவும் நோய்கள் விலங்குகளுக்கு ஏற்படும்போது, அவற்றில் வேறுவிதமான குணங்குறிகளையும் மனிதருக்கு ஏற்படும்போது, மனிதரில் வேறுவிதமான குணங்குறிகளைக் காட்டாது இருக்கலாம். இதனால் இந்த நோய்கள் மிருகங்களிலிருந்து, மனிதருக்குத் தொற்றியவை எனப் பலரும் சந்தேகிப்பதில்லை. சந்தேகமின்மையால் மிருகங்களிலிருந்து, மனிதர்களுக்கு நோய்கள் தொற்றாதிருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை அநேகமானோர் மேற்கொள்வதில்லை. அண்மைக்காலமாக இனங்காண முடியாத காய்ச்சலினால் பலர் அவதிப்படுகின்றனர், இறக்கின்றனர். இந்தக் காய்ச்சல் மிருகங்களிலிருந்து மனிதருக்குத் தொற்றும் நோய் எதனாலாவது ஏற்படுகிறதா? என ஆராயப்பட வேண்டும். மேலும், மிருகங்களிலிருந்து மனிதருக்குத் தொற்றிய நோய்கள், பின்னர் மனிதரிடமிருந்து மனிதருக்குத் தொடர்ந்து பரவிக்கொண்டும் செல்லலாம்.

எனவே, மிருகங்களிலிருந்து மனிதருக்குத் தொற்றும் நோய்கள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

மிருகங்களிலிருக்கும் நோய்கள், அவை மனிதருக்குத் தொற்றும் வழிகளின் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்தலாம்.

1) மிருகங்களின் மலத்தின் மூலம் தொற்றும் நோய்கள்.
   உதாரணம்- நாயின் மலத்தில் காணப்படுகின்ற தோலைக் குடைகின்ற புழுக்கள், மனிதனின் தோலில் தொற்றி, அவர்களுக்கு **(CUTANEOUS LARVA MIGRANS)** ஏற்படுத்தும் சொறி நோய்கள்.

2) மிருகங்கள் கடிப்பதனால் தொற்றும் நோய்கள்.
   உதாரணம் - விலங்கு விசர் **(RABIES)**

3) மிருகங்களின் சலத்தின் மூலம் தொற்றும் நோய்கள்.
   உதாரணம் - லெப்ரோஸ்பைறோசிஸ்

4) மிருகங்களின் இறைச்சியை உண்பதனால் தொற்றும் நோய்கள்.
   உதாரணம் - நாடாப்புழுத் தொற்று,
   மாட்டு விசர் **(MAD COW DISEASE)**

5) மிருகங்களின் பாலின் மூலம் தொற்றும் நோய்கள்.
   உதாரணம் - கசநோய் **(RUBERCLOSIS)**
   பேய்க்காய்ச்சல் எனப்படும் புறூசலோசிஸ் காய்ச்சல் **(BRUCELLOSIS)**

6) யோனி வழியாக வெளியேறும் பதார்த்தங்களின் மூலம் தொற்றும் நோய்கள்.
   உதாரணம் - பேய்க்காய்ச்சல் எனப்படும் புறூசலோசிஸ் **(BRUCELLOSIS)**

7) மிருகங்களைத் தொடுவதனால் தொற்றும் நோய்கள்.
   உதாரணம் - நாய்ச் சிரங்கு

மிருகங்களிலிருந்து மனிதருக்குத் தொற்றும் நோய்களை அவற்றைத் தோற்றுவிக்கும் வைரஸ்கள் என்பவற்றால் ஏற்படுத்தப்படும் நோய்கள் என, வேறொரு வகையாகவும் வகைப்படுத்தப்படலாம்.

**பறவைக் காய்ச்சல்**

இந்த நோய் கொக்சில்லாபுறா நெற்றி **(COXELLABRAU NETTI)** என்னும் பற்றீரியாவினால் உண்டாகும் பறவைகளின் மலம், குடிநீரில் கலப்பதால் இந்த நோய்த் தொற்று ஏற்படும். திறந்த நிலையிலிருக்கும கிணறுகளின் மீது நீர் அள்ளுவதற்குக் கப்பிகளைப் பொருத்துவதற்காகக் கிணறுக்குக் (குறுக்காக வைக்கப்படும்) விதானங்களில் (மரங்களில்) பறவைகள் இருந்து கிணற்றினுள் எச்சமிடுகின்றன. இதனைத் தடுக்கும் வகையில் கிணற்றின் குறுக்கே பொருத்தப்படும் கப்பி, தாங்கிமரத்தில் கூரான முனைகளைக் கொண்ட தகடுகள் பொருத்தப்பட்டு அல்லது தாங்கி மரத்தின் மேல் மெல்லிய கட்டுக்கம்பி இழுத்துக் கட்டப்பட்டு, அதில் பறவைகள் இருப்பது தடுக்கப்படவேண்டும். சூரிய ஒளி புகுவதால் கிணற்றுப் பாசி வளரும். பாசியினால் நீரில் நைதரசன் செறிவு அதிகரிக்கும். அதிக நைதரசன் இருப்பது கெடுதியானது. கிணறு மூடப்பட்டு, சுவர்கள் பூசப்பட்டு, கிணற்று முற்றம் கட்டப்பட்டு, மின் மோட்டார் மூலம் நீர் பெறப்படும் கிணறே சுதாதாரக் கிணறு என்பதை உணரவேண்டும். அரசாங்க வைத்தியசாலைகளில் இத்தகைய சுகாதாரக் கிணறுகளை அவதானிக்கலாம்.

**பிளேக் (PLAQUE)**

இந்த நோய் யேசினா பெஸ்ரிஸ் **(YERSINA PESTIS)** என்னும் பற்றீரியாவினால் உண்டாகும். எலிகளாலும், தெள்ளுகளினாலும் இந்த நோய் மனிதருக்குப் பரப்பப்படும். இந்த நோய் கொண்ட எலி, மனிதரைக் கடிப்பதாலும், எலிகளின் மலம், சலம், புண்களின் வெளியேறல்கள் போன்றவை கலந்து உணவுப் பொருட்களை மனிதர் உண்பதாலும், எலிகளைக் கடித்த தெள்ளுகள் மனிதரைக் கடிப்பதாலும், இந்த நோய் மனிதருக்கு ஏற்படும். எலிகளின் மூக்கு, வாய், பிறப்புறுப்பு போன்றவற்றிலிருந்து வெளியேறும் பதார்த்தங்கள் மனிதரின் புண், கீறல், சீதமென்சவ்வு என்பவற்றுடன் தொடுகை ஏற்படுவதாலும், இந்நோய் ஏற்படலாம்.

*(தொடரும்....)*

ச.ஆ.கோபாலமூர்த்தி

# லைபீரிய ஜனாதிபதியின் பிரதேசம் கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்தது!



லைபீரியாவில் - இரண்டாவது நகரைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதையடுத்து, தாம் கடும் பதில் தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக லைபீரிய இராணுவம் கூறியுள்ளது.

கிளர்ச்சியாளர்களுக்கு விநியோகம் செல்வதைத் தடுக்க புச்னான் பகுதியில் இராணுவம் வீதிச் சண்டையிலீடுபட்டுள்ளது என லைபீரியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

துறைமுக நகரான புச்னான் கடந்த திங்களன்று கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்தது. துறைமுகத்தில் கடும் போர் நடப்பதால், இதனூடான சிவிலியன்களுக்கான உணவு விநியோகமும் பாதிப்படைந்துள்ளது.

இதேவேளை - லைபீரியாவில் அமைதிப்பணியை மேற்கொள்ளவென 1300 நைஜீரியப் படைகள் புறப்படத் தயாராகியுள்ளன.

1990 இல் தற்போதைய ஜனாதிபதி ரெயிலர் சிவில் யுத்தத்தை நடத்துவதற்கு, தளமாக விளங்கிய க்ராபான்கா நகரம் தற்போது கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்துள்ளது. போர் நடைபெறும் பகுதிகளில் துப்பாக்கிச்சூடுகளின் மத்தியில் சூறையாடல்களும் பரவலாக நடைபெறுகின்றது.

# உப்பு மூலம் நஞ்சூட்டிய பெண்ணுக்கு சிறை



இளம் பெண்ணை அதிகளவு உப்பைச் செலுத்தி நஞ்சூட்டிக் கொல்லமுயன்ற பெண் ஒருவருக்கு எடின்பரோ நீதிமன்றம் நான்கு வருடச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

சூசன் ஹமில்டன் (வயது 39) என்ற இந்தப்பெண் மீதான விசாரணை கிளாஸ்கோவிலுள்ள உயர் நீதிமன்றால் விசாரிக்கப்பட்டது.

மூன்று வருடங்களுக்குமுன், இப்பெண் எட்டு வயதான சிறுமிக்கு நஞ்சூட்டி கொல்ல முயன்றதில் அச்சிறுமியின் மூளை பாதிக்கப்பட்டது. தீர்ப்புக் குறித்து கருத்து வெளியிட்ட சூசனின் உறவினர் அவர் குற்றமற்றவர் என்றனர்.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு, இப்போது 11 வயது. அவர் நகரின் றோயல் வைத்தியசாலையின் மூளை வளர்ச்சியற்ற குழந்தைகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குருதியில் சோடியத்தின் அளவு அதிகரித்தமையே - இந்த நிலைக்குக் காரணம் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகவலம்

## கொந்தளிப்பில் ஆப்கான்

அமெரிக்க ஆதரவு பெற்ற ஆப்கான் போர் பிரபுக்களினால், ஆப்கான அச்சம் நிறைந்த பூமியாக உள்ளது. என சர்வதேச மனித உரிமைகள் குழு கண்டித்துள்ளது. அமெரிக்க ஆதரவு பெற்ற இவர்களால், அடுத்த வருட தேர்தல்களுக்கும் ஆபத்து ஏற்படலாம் என அக்குழு கூறுகிறது.

ஆப்கானில் - புதிய இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மேற்கொள்ளும் துஷ்பிரயோகங்கள் குறித்து அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. தலிபான்கள் அதிகமாக உள்ள பகுதிகளில், அமெரிக்கப்படைகள் தாக்குதல் நடத்தவேண்டும் என, மாகாண அரசு ஒன்று அழைப்பு விடுத்துள்ளதைத் தொடர்ந்து - மனித உரிமைகள் குழுவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



பக்தாத்தில் தாக்குதலில் காயமடைந்த தனது சகாவை வாகனத்தில் ஏற்றிச் செல்லும் அமெரிக்கப் படைவீரர்.



மும்பாயில் நேற்று இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பில் பலத்த சேதமடைந்த பஸ் வண்டியை படத்தில் காணலாம். இச்சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

# பிரான்சில் பெரும் காட்டுத்தீ 4 உல்லாசப் பயணிகள் பலி



(பாரிஸ்)

தென்பிரான்சில் பெருங்காட்டுத்தீ மூண்டதால் நான்குபேர் பலியாகியுள்ளனர். வீடுகள் மற்றும் கோடைக் கால விடுமுறை, முகாம்கள் என்பன அழிந்துள்ளன. தீ பரவுவதை அறிந்த சுற்றுலாப்பயணிகள், அலறியடித்தபடி பாதுகாப்புத்தேடி ஓடினர். சிலர் உடைமாற்ற நேரமின்றி நீச்சலுடையிலேயே ஓடினர்.

காட்டுத்தீயை அணைப்பதில் - 1700 தீயணைப்புப் படையினரும், ப்ரெஞ் படையினரும் ஈடுபட்டுள்ளனர். பிரான்சில் இம்முறை கோடைக்கால வெப்பம் அதிகமாக இருப்பதால், தீயைக்கட்டுப்படுத்துவது கடினமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. திங்களன்று, புதிதாக 12 இடங்களில் தீ பரவியது. காற்று வீசத்தொடங்கியுள்ளதால் - தீ மேலும் தீவிரமாகப் பரவுகிறது.

பிரிட்டிஷ் யுவதி, அவரின் பேர்த்தியார் மற்றும் ஒருவர் தீயில் சிக்கி இறந்துள்ளனர். அச்சத்துடன் தப்பியோடும் பயணிகளால், வீதியில் போக்குவரத்து நெரிசல் காணப்படுகிறது.

தீயினால் - ஏற்கனவே 10 ஆயிரம் ஹெக்ரயர் காடு அழிந்துள்ளது.



கடந்த ஒக்ரோபரில் இந்தோனேசிய பாலித்தீவு குண்டுவெடிப்பின் சந்தேக நபரான இமாம் சமுத்ரா நீதிமன்றத்திலிருந்து அழைத்துச் செல்லப்படுகிறார்.

# சம்பள ஏற்றத்தாழ்வு குறித்து கென்யப்படையினர் சர்ச்சை!



சம்பள அதிகரிப்பு மற்றும் சம்பள வேறுபாடு குறித்து, கலகம் விளைவித்த கென்யப் படைச்சிப்பாய் ஒருவர், கைதாகி விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளார். படையினரின் கீழ்மட்ட நிலையினருக்கு, சம்பள அதிகரிப்புப் போதுமானதல்ல எனக் கண்டிக்கும் துண்டுப்பிரசுரங்களை இச்சிப்பாய் வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இத்துண்டுப் பிரசுரத்தினால் - படையினர் மத்தியில் கொந்தளிப்பு ஏற்படச்சாத்தியமில்லை. ஒரேயொரு படைத்தளத்திற்குள்ளேயே இப்பிரசுரங்கள் காணப்பட்டதாக, கென்யப் படையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும், கென்யப் படையினர் மத்தியில் சிப்பாய்களுக்கு சம்பள அதிகரிப்பு போதுமானதாக இல்லை என்ற கருத்துப் பரவலாகக் காணப்படுகிறது. சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளாவிட்டால், கலகம் விளைவிக்கும் நிலையில் அவர்கள் உள்ளனர் எனக் கென்யப் பத்திரிகைகள் கூறுகின்றன.

கென்யாவில்:- மூத்த படையதிகாரிகளுக்கு 400 சதவீத சம்பள உயர்வும், கனிஷ்ட அதிகாரிகளுக்கு 21 சதவீத சம்பள உயர்வுமே கிடைப்பதாக அப்பத்திரிகை கூறுகின்றது.

## சிறுவர் மீதான கல்விச்சுமை வேண்டாம் என்கிறார் பிரிட்டிஷ் ஆசிரியர்

சிறுவர்களின் கல்வி தொடர்பாக- ஆசிரியர்களும், பெற்றோர்களும் எடுக்கும் நடவடிக்கைகள் அவர்கள்மீது அழுத்தத்தை ஏற்படுத்துவதோடு, அவர்களின் உரிமைகளையும் அச்சுறுத்துவதாக அமைந்துவிடுவதாக, பிரிட்டனின் ஆசிரிய ஒன்றியத்தின் தலைவர் ஜிம் ஒநெய்ல் தெரிவித்தார்.

எமது பிள்ளைகள் வளரும் வேகத்துக்கு, அவர்கள் மீது அழுத்தமும் அதிகரிக்கிறது. இது ஒரு பஷணாகக்கூடக் கருதப்படுகிறது என அவர் கூறுகிறார். ஹரோ கேட்டில் நடைபெற்ற ஒன்றியத்தின் வருடாந்த கூட்டத்தில் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில் -

அதிகரித்த பரீட்சைகள் அவர்களை அச்சுறுத்துகின்றன. சிறுவர்கள், சிறுவர்களேயன்றி அனைத்தையும் ஊற்றிவைக்கும் பாரிய கொள்கலன்கள் அல்ல, ஆசிரியர்களும் சமூக ஒழுங்கைப் பேணுவதில் விருப்பின்றி இருக்கின்றனர் - என்றார்.

# ஆங்கிலக் கால்வாயை கிளைடரில் கடக்க முயற்சி



ஆங்கிலக் கால்வாயை- செயற்கை இறகின் உதவிமூலம் கடக்க அவுஸ்ரேலியர் ஒருவர் திட்டமிட்டுள்ளார். பீலிக்ஸ் என்பவர் - விமானத்தின் உதவி மூலம், 30 ஆயிரம் அடி உயரத்திற்குச் சென்று, இயந்திரங்களற்ற காற்றில் சறுக்கிச் செல்லும் கிளைடர் மூலம் 35 கிலோமீற்றருக்கு காற்றில் சறுக்கிச் சென்று பிரான்ஸை அடையத் திட்டமிட்டுள்ளார்.

குளிரான காலநிலையில் - மணிக்கு 360 கிலோமீற்றர் வேகத்தில் இவர் கிளைடர் மூலம் பறக்கவுள்ளார்.

34 வயதான இவர் - முன்னாள் தொழில்நுட்பவியலாளராவார். இவரது பறப்பு நாளை காலை இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர் ஏற்கனவே பிரேசிலில் றியோடி ஜெனீரோ நகரைக் கடந்து பறந்து சாதனை படைத்திருந்தார்.

நமது ஈழநாடு

The Leading Daily of Tamils' Homeland

பிரன்னா கணனிக்கல்வி நிலையம்
K.K.S றோட் சுன்னாகம்

எமது நிலையத்தில் குறைந்த செலவில் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

* பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள்.
* றோணியோ வேலைகள்.
* Printing (Lazer And Dotmatic, Colour)
* Scanning
* CD Writing(MP3, Audio,Vidio)
* Computer sales and Repairing

# மணற்காடு, குடத்தனையில் மணல் மண் அகழமுடியும்!

## யாழ்.வந்த சுரங்க அதிகாரிகள் தெரிவிப்பு

வடமராட்சியிலுள்ள மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் மணல் மண்ணை அகழலாம். இதனால், எவ விதமான சூழல் பாதிப்பும் ஏற்படாது என, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த மணணியல் மற்றும் கனிப்பொருள் பற்றிய, ஆய்வுகளை மேற் கொள்ளும் சுரங்கத் திணைக்கள உயரதிகாரிகள், நேற்று யாழ்.செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தனர்.

மணற்காடு கடற்கரையிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்கப்பால் உள்ள மணல் திட்டிகளிலிருந்து, கட்டடத் தேவைகளுக்கு தேவையான மணலைப் பெறலாம். அப்பகுதியிலுள்ள மணலைப் பாதுகாக்க விசேட மரநடுகைத் திட்டத்தையும் மேற்கொள்ளவேண்டும். எனவும் இந்த அதிகாரிகள் இக்கூட்டத்தில் தெரிவித்தனர்.

இதேவேளை, இங்குள்ள மண்ணின் மாதிரிகள்- மேற்படி அதிகாரிகளினால், ஆய்வுக்காக கொழும்பிலுள்ள கனிப்பொருள் பணியக ஆய்வுகூடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. ஆய்வுகள் பூர்த்தியடைந்த பின்னர் இறுதி அறிக்கை யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கட்டடத் தேவைகளுக்காக மணலை, தனியார் மற்றும் கட்டடத் திணைக்களம், மிகவிரைவில் அந்தப் பிரதேச செயலங்களின் சிபார்சுடன் பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலில் கனிப்பொருள் பணியகத்தின் பணிப்பாளர் சுனில் பீரிஸ், புவிச்சரிதவியல் பொறியியலாளர் உதய் பெரேரா யாழ். அரச அதிபர் பத்மநாதன், இராணுவத்தினரின் சார்பில் வீரதுங்க, பிரதேச செயலாளர்கள் மற்றும் கட்டடத் திணைக்களத்தின் பொறியியலாளர்களும் கலந்துகொண்டனர்.

# மேலும் ஆயிரம் குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு!

யாழ். குடாநாட்டில் மீள் குடியமர்ந்த - மேலும் ஆயிரம் குடும்பங்களுக்கு, மீள் குடியமர்வுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் - கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் வெளி மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் மீள்குடியமர்வுக் கொடுப்பனவே, மேலும் ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதன்படி - மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 655 குடும்பங்களுக்கும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 166 குடும்பங்களுக்கும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 149 குடும்பங்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களும் மீள் குடியமர்வுக் கொடுப்பனவினைப் பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக் குடும்பங்களுக்கான - மீள் குடியமர்வுக் கொடுப்பனவுக்குரிய காசோலைகள் இம் மாதத்திற்குள் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இக் கொடுப்பனவினைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் குடும்பங்கள், தமக்குரிய கொடுப்பனவுப் பணத்தினை அடுத்த மாத முதல் வாரத்திற்குள் வங்கிகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

இம் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு - இதுவரை ஆறாயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவினைப் பெறுவதற்கு, மொத்தமாக பன்னிரண்டாயிரம் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (லி)

# நாவற்குழி உணவுக் களஞ்சியம் அரச செயலகத்தால் திருத்தம்

## ஜி.ரி.இசற் மறுசீரமைக்க மறுப்பு

நாவற்குழி களஞ்சியத்தில் உள்ள மேலும் 3 களஞ்சிய அறைகளைத், திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச அதிபரே இந்தத் திருத்தப்பணிகளை மேற்கொண்டுள்ளார்.

ஏற்கனவே இந்தக் களஞ்சியக் கட்டிடத்தில் ஏழு அறைகள் திருத்தப்பட்டு பொருட்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் களஞ்சிய அறை பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாகவே இம் மூன்று அறைகளும் திருத்தப்பட்டு வருகின்றன.

யுத்த அனர்த்தங்களுக்கு முன்னர் ஜி.ரி.இசற் நிறுவனத்தினரே இக் களஞ்சியத்தினைப் புனரமைத்தனர். எனினும் தொடர்ந்து களஞ்சியங்களை அந்த நிறுவனத்தினர் புனரமைக்க மறுத்ததினால் அரச செயலகத்தினால் இந்தக் களஞ்சியசாலை புனரமைக்கப்பட்டு வருகினறது. (25)

# யாழ்.மாவட்ட மின்விநியோகம் இன்று பாதிக்கப்படமாட்டாது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில், இன்று வழமைபோல் மின் விநியோகம் நடைபெறும் என்று யாழ்.மாவட்ட மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மின்சாரசபை ஊழியர்கள் இன்று வேலைநிறுத்தம் செய்யவிருந்தனர். இதையொட்டி இன்று நாடுமுழுவதும் மின்சாரவிநியோகம் தடைப்படும் என முன்னர் செய்திகள் வெளியானமை தெரிந்ததே.

# வாழ்வை உயிர்ப்புடன் நகர்த்தும்...

தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

எமது தேசிய ஆன்மாவில ஆழ வேரோடிநிற்கும் விடுதலை வேட்கையை, சுதந்திரத்திற்கான அவாவினை, அதன் மெய்யுண்மையை இவ் இலக்கியப் படைப்புக்கள் புற உலகிற்கு வெளிப்படுத்துகின்றன. இன்று எமது மண்ணில் பிறப்பெடுத்துக்கொண்டிருக்கும் இவ்வாறான இலக்கியங்களில்- புதுவை அண்ணாவின் கவிதைகள் ஆழமும், வீச்சும் கேட்போர் மனதை ஆட்கொண்டுவிடும் வலிமையும் கொண்டவை.

தமிழீழத் தேசியத் தலைவர் மீதான ஆழமான பற்றுதலையும், பாசத்தையும், அவரின் தீர்க்கமான வழிகாட்டலையும் வெளிப்படுத்துபவையாக அமைவதோடு, மாவீரர்களின் அர்ப்பணிப்பையும், தியாகம் செறிந்த உள்ளத்தை உருக்கும் அவர்களுடைய வாழ்வினையும், மிக அற்புதமாகச் சொல்லும் ஒரு வரலாற்று ஆவணம், புதுவை அண்ணாவின் உலைக்களம்.

தமிழீழத் தேசத்தின் நீண்ட வீரம் செறிந்த விடுதலை வரலாற்றை வரிக்கு வரி உணர்வுபொங்க அழகாக வெளிப்படுத்தும் பாங்கு தனித்தன்மை மிக்கது. எமது மாவீரர்களின் குருதிச் சுவடுகளை, தமிழீழ தேசத்தின் விடுதலை வரலாற்றின் பக்கங்களில் இரத்தம் தோய்ந்த உணர்வு வரிகளாக - இவருடைய கவிதைகள் எழுதிச்செல்கின்றன.

இவரின் கவிவரிகள் எங்கும் இம் மண்ணின் வாசனையும், இங்கு வாழும் மக்களின் உணர்வுகளும், அவர்களின் ஆன்ம உறுதியும், விரவிக்கிடக்கும். இவருடைய கவிதைகள் எமது தேசியத் தலைவரது தீர்க்கமான விடுதலைக்கான முன்னகர்வுகளையும், சமகாலப் போராட்ட அனுபவங்களையும் வெளிப்படுத்தி நிற்கும். தமிழீழத் தேசியத் தலைமைமீதும், தேசவிடுதலை மீதும் மக்களை ஈர்க்கும் வகையில் இவருடைய கவிவரிகள் எல்லோர் மனத்தையும் ஆழத்தொடும் ஆற்றல் கொண்டது.

பள்ளிச் சிறார்களில் இருந்து வயது முதிர்ந்தோர் வரை - இவரின் கவிவரிகள் தாக்கத்தினைக் காண முடியும். குறிப்பாக விடுதலைப் புலிகள் ஏட்டில் தவறாது தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் வியாசனின் உலைக்களம் ஒரு தனிவீச்சும், வனப்பும் கொண்டது. கற்றறிந்த கல்விமானில் இருந்து சாதாரண பாமர மக்கள்வரை வீச்சுடன் மனதை ஆட்கொண்டுவிடும் ஆற்றல்கொண்டவை அக்கவிதைகள்.

"புதுவை இரத்தினதுரையின் கவிதையில் ஒரு புதுமை இருக்கின்றது. ஆழமும் அழகும் இருக்கின்றது. ஒரு இசை இருக்கின்றது. ஒரு ஈர்ப்புச் சக்தி இருக்கின்றது" எமது தேசியத் தலைவர் - அவரது கவிதைகள் பற்றி ஒருமுறை தனது பாராட்டுரையில் வியந்திருந்தார். தாம் பிறந்தமண், தான் பிறந்த சூழல், தான் உறவு கொள்ளும் சமூகம், தான் வாழும் காலம் என்ற ரீதியில் வாழ்க்கையைப் படைப்புத் தளமாகக் கொண்டு, வாழ்வின் புறநிலை உண்மைகளை மூலப்பொருளாக எடுத்து கலைப்பொருள் படைப்பவனே சிறந்த கலைஞன், என்ற தேசியத் தலைவரின் வரைவிலக்கணத்துக்குச் சான்றாகி நின்றவர் புதுவையண்ணா.

எளிமையாக அழகுத் தமிழில், பாட்டன் காலத்து வரலாற்றில் இருந்து இன்றுவரை, எமது இனத்தின் இருப்பின் அடையாளத்தை, எமது போராட்ட வாழ்வின் யதார்த்தத்தை, ஆணித்தரமாக வெளிப்படுத்தும் கவிதைகளாக உலைக்களம் அமைந்துள்ளது. படிப்போர் மனதை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும், இரத தமும் சதையும் கொண்ட உணர்வின் வரிகள் அவை.

மக்களின் வாழ்வனுபவத்தை இரத்தமும் சதையுமாக, உணர்வீச்சுடன் வெளிப்படுத்தும் வியாசனின் உலைக்களம் தொகுக்கப்பட்டு ஒரு நூலாக வெளிவருகின்றது. "குந்த ஒரு குடிநிலம் வேண்டும்" என பாட்டன் காலத்திலிருந்து, இன்றுவரை ஏக்கத்தை வெளிப்படுத்தி நிற்கும் வியாசனின் உலைக்களம் நூலுருக் காண்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறான தனித்துவமான வியாசனின் உலைக்களம் தொடர்ந்து வளரவும், இவரின் இலக்கியப்பணி சிறப்புடன் தொடரவும், பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மொழிபெயர்ப்பாளர் தேவை

பத்திரிகையில் பணியாற்றுவதற்கு, ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்புச் செய்யக்கூடிய-மொழி பெயர்ப்பாளர்கள் தேவை.

எதிர்வரும் 02.08.2003 சனிக்கிழமை காலை 10 மணிக்கு, அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாக முகாமையாளர்,
நமது ஈழநாடு.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1533 திகதி: 29.07.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| E | 8 | 8 | 0 | 6 | 7 | 2 |

# யாழ் மாவட்ட அபிவிருத்திக்கு நிகொட் அமைப்பு நிதியுதவி

## 26 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ். மாவட்டத்தில் - அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு, நிக்கொட் செயற்திட்டத்தின் கீழ் - 26 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் - யாழ். மாவட்டத்தில ஆறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு, மாகாண திட்டமிடல் இணைப்புக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டங்களில் - கல்வி சம்பந்தமான அபிவிருத்தி வேலைகளுக்கு - இரண்டு திட்டங்களுக்கும், சுகாதாரம் சமபந்தமான அபிவிருத்தி வேலைகளுக்கு - இரண்டு திட்டங்களுக்கும், சமூக நலம் சம்பந்தமான அபிவிருத்தி வேலைகளுக்கு - இரண்டு திட்டங்களுக்கும், நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கைதடி வயோதிபர் இல்லம் புனரமைப்புச் செய்வதற்கு 23 இலட்சம் ரூபாவும், கைதடி செவிப்புலனற்றோர் நிலையத்திற்கு 10 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதுடன்-

யாழ் போதனா வைத்தியசாலைக்குத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு 120 இலட்சம் ரூபாவும்,

காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலய புனரமைப்பிற்கு 65 இலட்சம் ரூபாவும், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரிக்கு 46 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (லி)

### கண்காணிப்பு...

அரசபடைகள், குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றும் என்று கூறுவதற்கு ஹொக்லன்ட்டுக்கு யார் அதிகாரம் கொடுத்தது என்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டிப்பான தொனியில்- அவரிடம் தொலைபேசி மூலம் வினாவெழுப்பினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (200)

### புலிகளின்...

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுநடத்தும் போது, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும், விடுதலைப் புலிகளின் சட்டஆலோசகர் வி.உருத்திரகுமாரனும் உடனிருப்பர் என்று தெரியவருகிறது.

மேற்படி வெளிநாட்டுப் பயணத்தை முடித்து, சு.ப.தமிழ்ச்செல்வன் கிளிநொச்சி திரும்பியதுமே திட்டவரைபு குறித்த விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பதில் அரசிடம் வழங்கப்படும் என்றும், எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 077 - 6080660, 021 - 2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1258)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.